Registered as a News paper in Sri Lanka

# தினக்கதிர்


வாரவெளியீடு

THINAKKATHIR WEEKLY

දිනක්කදිර්

1 ஜூன் 09 --- 15வரை - 2002 ஞாயிற்றுக்கிழமை கதிர் 5 ஒளி 3 விலை 10/-

இணையத்தளத்தில்
தினக்கதிர்
கிழக்கின் முதல்- ஒரே தினசரி உங்கள் ''தினக்கதிர்'' இப்போது இணையத்தள்த்தில்
www.tamilnaatham.com
என்ற முகவரியில் சென்று பாருங்கள்.





❒ சவால் விடும் படையினர்

❒ சமாதான முயற்சிகள் காலம் கடத்தலா?

தினக்கதிர் சினிமா



உள்ளே உலவும் மிருகங்கள்

பெண்கள் கூடினால்...



# தடை நீங்கும் செய்தியை அறியாமல் பிரிந்த சிவா

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது ஸ்ரீலங்கா அரசினால் விதிக்கப்பட்டிருந்த 18 ஆண்டுகாலத் தடை நீக்கப்படும் என்பதை ரணில் அரசாங்கம் ஏறத்தாள உறுதிப்படுத்திவிட்டது.

கடந்த புதனன்று தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுபபினர்களைச் சந்தித்து உரையாடிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தாய் லாந்துப் பேச்சுக்குப் பத்து தினங்களுக்கு முன்னர் புலித் தடை நீங்கும் என உறுதியளித்திருந்தார்.

இப்போது பிரதமரின் அந்த உறுதி மொழி ஏறத்தாள உறுதிப்படுத் தப்பட்டுவிட்டது.


இந்நற்செய்தி வெளியிடப்பட்ட புதனன்று அதிகாலையிலேயே, கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் இவ்வுலகை விட்டு நீங்கிவிட்டார்.

புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகப்பரதிநதிகள் எனவும், எனவே அவர்கள் மீதான தடையை நீக்கி, அவர்களுடன் அரசு பேச வேண்டும் என அமரர் சிவசிதம்பரம் தொடர்ச்சியாக வாதிட்டுவந்தார்.

எனினும் புலிகள் மீதான தடை நீக்கப்படும் என்ற அரசின் அறிவிப்பை அறியாமலேயே சிவசிதம்பரம் இவ்வுலகை விட்டு நீங்கினார்.

இன்று அவரது இறுதிக் கிரியைகள் யாழ்பாணத்தில் நடைபெறும் வேளையில் அவரது ஆன்ம சாந்திச் செய்தியாக தடை நீக்கம் பற்றிய அறிவிப்பும் வெளிவந்துள்ளது.

❒ கடற்புலிகளும் சுழல் சூறாவளியும்






கடற்படைக்குப் புதிய போர்க்கப்பல்

போதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்கதிர்

த.பெ. இல: 06
155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554
Email:- tkathir10@hotmail.com


## செய்யாமலே போய்விடுகிறார்கள்

மூத்த அரசியல்வாதியும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவருமான மு.சிவசிதம்பரம் அமரராகிவிட்டார்.இன்று அவரது ஈமக் கிரியைகள் , யாழ் கரவெட்டிப் பகுதியில் நடைபெறவுள்ளன.

தமிழ் மக்கள் சந்தித்த மற்றுமோர் தலைவரின் இழப்பு இது ஒரு முதுபெரும் தலைவர் ஒரு காலத்தில் தமிழ் மக்களுக்காக உரத்துக் குரல்கொடுத்தவர் என்ற வகையில் தமிழ் மக்களுக்கு இது ஓரளவு வேதனையான விடயமே.

ஆனாலும் அவர்களை ஆழ்ந்த வேதனைக்குள்ளோ அன்றி மீளத் துயருக்குள்ளோ ஆழ்த்தும் ஓர் இழப்பாக இது இல்லாமல் இருப்பதற்கும் காரணங்கள் இருக்கவே செய்கின்றன.

தமது நீண்டகால அரசியல் போராட்ட வரலாற்றில் தமிழ்மக்கள் இவ்வாறு பல தலைவர்களை இழந்துள்ளனர். சிலர் இயற்கையாகப் போய்ச் சேர்ந்தனர். சிலர் பேரினவாதிகளினால் கொல்லப்பட்டனர்.மற்றும் சிலரோ, தமிழர் தரப்புகளிடையே நடைபெற்ற மோதல்களில் கொல்லப்பட்டனர்.

இந்த இழப்புக்கள் எல்லாமே தமிழ் மக்களுக்குத் துயரமான விடயங்களே ஆனாலும் இந்தத் தலைவர்கள் எல்லோருமே, எதற்காகப் புறப்பட்டவர்களோ, எதை எய்துவதற்காக இவர்களை தமிழர்கள் தலைவர்களாக ஏற்றுக் கொண்டனரோ, அந்த இலக்கு எட்டாமலே, அதை எட்டுவதற்கு நியாயமான முயற்சிகளை எடுக்காமலே இவர்கள் போய்ச்சேர்ந்துவிடுவதுதான் தமிழ் மக்களுக்கு உண்மையில் வேதனை தரும் விடயம்.

1977 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மகாநாட்டில் தனித் 'தமிழீழம்' தான் தமிழர் பிரச்சினைக்கு ஒரே தீர்வு என உறுதி படஅறிவித்து தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றவர்கள் கூட்டணித்தலைவர்கள்.

அவர்களது இந்த வழிகாட்டல், பின்னர் தமிழ் இளைஞர்கள் பலர் ஆயுதமேந்தி இக்கோரிக்கைக்காகப் போராடும் ஒரு நிலையை தோற்றுவித்தது. ஆனால் ஆரம்பத்தில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்திய கூட்டணித் தலைவர்கள் பின்னர் தமது நிலைப்பாட்டிலிருந்து நழுவத் தொடங்கினர்.

தாமே அறிவித்த அந்த வழிமுறையிலிருந்து நழுவியதோடல்லாமல் பாராளுமன்ற அரசியலில் மீண்டும் நம்பிக்கை வைத்து தமிழர் தரப்பு தொடர்ந்து ஏமாற்றப்படவும் இவர்கள் காரணமாக இருந்துவிட்டனர்.

இவ்வாறு தாம் தொடங்கிவிட்ட போராட்டத்தை இடைநடுவில் கைவிட்டுவிட்டு, 'பெரும் அறிக்கைப் போராளிகளாகவே இவர்களில் சிலர் ஒவ்வொருவராகப் போய்ச்சேர்ந்துவிட்டனர்.

அந்த வரிசையிலேயே, மு.சிவசிதம்பரமும் தனது பயணத்தை ஆரம்பித்துவிட்டார். இவரது இழப்பால் துயருறும் தமிழ் மக்கள் அதைவிட அதிகமாக தனது மற்றைய தலைவர்களைப் போலவே இவரும் செய்யவேண்டிய பலவற்றைச்செய்துமுடிக்காமலே போய்விடுவதையிட்டே இன்னும் வேதனைப் படுகிறார்கள்.

# சமாதான முயற்சிகளுக்கு சவால்விடும் படையினர்

மிகவும் நம்பிக்கையுடனும், எதிர்பார்த்ததைவிட வேகமாகவும் நடைபெற்று வந்த சமாதான முயற்சிகள், தற்போது மிக மந்தகதியை அடைந்திருப்பதுடன், இது சரிவருமா? என்ற ஐயப்பாட்டையும் மக்களிடையே தோற்றுவிக்கவும் தொடங்கிவிட்டது. இத்ற்குப் பிரதான காரணம் தற்போது வடக்குக் கிழக்கில் படையினர்தோற்றுவித்துள்ள கெடுபிடிச்சூழலேயாகும்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே இணக்கப்பாட்டைக் காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதெல்லாம் புலிகளால் முக்கியமாக வலியுறுத்தப்பட்டுவந்த விடயம், போர் நிறுத்தப் பட்டு, பொருளாதார, பயணத் தடைகள் அகற்றப்பட் டு இயல்பு வாழ்க்கை தோற்று விக்கப்பட்டபின்னரே பிரச்சினைத் தீர்வுபற்றிப் பேச முடியும் என்பதாகும். இந்த விடயம் உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்படாத சந்தர்ப்பங்களிலேயே, சமாதான முயற்சிகள் குழம்பிப்போயின.

தற்போதைய சமாதான முயற்சியிலுள்ள சிறப்பம்சம் என்னவென்றால், தம்முடைய இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படக் கூடிய ஒரு நிலைமையை, நோர்வே அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின்மூலம் புலிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு ஒரு விரிவான உடன்படிக்கையின் மூலம் சமாதானச் சூழல் தோன்றுவதற்கான அடிப்படைவிடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டு, அதனைக் கண்காணிப்பதற்கென் சர்வதேச கண்காணிப்புக் குழுவினரும் நியமிக்கப்பட்ட நிலையிலும் உடன்படிக்கை உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்படாமலும், பல மீறல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதும்,இந்த சமாதான முயற்சிகளின் வெற்றி குறித்தபல சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளன.

ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் படை நடவடிக்கைகள், கெடுபிடி களிலிருந்தான ஓய்வென்பது முக்கியமான ஒரு விடயமாக இருந்தது. இதனால்தான போர் ஓய்வை ஒரு பிரதான கோரிக்கையாகப் புலிகள் முன்வைத்தனர்.

ஆனால், ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழர் தாயகப் பிரதேசமான வடக்குக் கிழக்கில் படையினரின் தாக்குதல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளபோதும், படைக் கெடுபிடிகள் பூரணமாகக் கட்டுப்படுத்தப்படவில்லை.இ து மழை நின்றும் தூறல் ஓயாததுபோன்ற ஒரு நிலைமைபோன்றே உள்ளது. அடைமழையைவிட, சமயங்களில் தூரல் மழையே நோய்கள் தோன்றக் காரணமாகிவிடுவதுபோல, தற்போது வடக்குக் கிழக்கில் தொடரும் படையினரது கெடுபிடிகள்,மக்களுக்கு பெருத்த அச்சத்தைத் தோற்றுவித்துள்ளன.

வடக்குப் பகுதியைப் பொருத்தவரையில், இது முகாம் பலப்படுத்தல், புதிய முகாம்கள், சோதனை அரண்கள் அமைத்தல், மீன்பிடிக் கட்டுப்பாடு என்ற வடிவங்களில் தொடர,கிழக்கில் அவை பொதுமக்கள் மீதான கொலை மிரட்டல், தாக்குதல்கள் என விஸ்வரூபம் எடுத்துள்ளன.

மே மாதம் அம்பாறை மாவட்டம் கஞ்சிகுடிச்சாறு பகுதியில் விடுதலைப் புலி உறுப்பினர் மீது அதிரடிப்படையினர் நடாத்திய தாக்குதல் ஒன்றையடுத்து பொதுமக்கள் மத்தியில் எழுநத எதிர்ப்பலைகள், அதிரடிப்படையி னரின் அட்டகாசங்கள் பொதுமக்கள் மீதும் திரும்புவதற்கு காரணமாக அமைந்துவிட்டது.

கஞ்சிகுடிச்சாறு சம்பவத்திற்கு எதிராக அக்கரைப்பற்றில் பொதுமக்கள் நடாத்திய எதிர்ப்புப் போராட்டத்தை அதிரடிப்படையினர் வன்முறைமூலம் அடக்க முற்பட அது ஒரு பெரும் மக்கள் போராட்டத்துக்கே வித்திட்டுவிட்டது.

கிழக்கு மாகாணத்துக்கென்றே பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டு அவர்களை பல வழிகளிலும் மோசமாகத் துன்புறுத்திவந்த அதிரடிப்படையினருக்கு எதிராக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள் எங்கனும் மக்கள் கிளர்ந்தெழுந்தனர்.இது அதிரடிப்படையினர் எதிர்பாத்திராத ஒன்றாக அமைந்ததுடன், அவர்களுக்கு பலத்த அவமானத்தையும் தோற்றுவித்துவிட, தற்போது அதிரடிப்படையினர் மக்களைப் பழிவாங்கும் முயற்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களிலுடம் தொடர்ச்சியாக இத்தகைய பழிவாங்கும் நடவடிக்கைகளை அதிரடிப்படையினர் முன்னெடுத்து வருகின்றனர். இதில் பொதுமக்களுக்கு பீதியைத் தோற்றுவித்துள்ள ஒன்று .அதிரடிப்படையினரின் சவப்பெட்டி மிரட்டலாகும். முதலில் வீரமுனைக் கிராம மக்களுக்கு விடுக்கப்பட்ட இத்தகைய மிரட்டல் பின்னர் அம்பாறை மாவட்டக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிக்கே சவப்பெட்டி மிரட்டல் விடுக்கப்படுமளவுக்கு தீவிரமடைந்துள்ளது.

**— அனசூயா —**

அம்பாறை மாவட்டக் கண்காணிப்புக்குழு உறுப்பினரும் கல்வியதிகாரியுமான திரு.சண்முகநாதனுக்கு மே 31ஆம் திகதி இரவு தொலைபேசிமூலம் சவப்பெட்டிகளைத் தயார்ப்படுத்திவைக்குமாறு



சிங்களத்தில் மிரட்டல் விடுக்கப்பட்டது.இதே போன்றதொரு மிரட்டல் அதிகாலை 1.30 மணியளவில் காரைதீவு பிரஜைகள் குழுத் தலைவருக்கும் விடுக்கப்பட்டது.

இந்த இருவருமே உள்வரும் தொலைபேசி அழைப்புக்களை இனங்காணும் வசதிமூலம் தமக்கு இவ்வாறு மிரட்டல் விடுத்தவர்கள் காரைதீவு அதிரடிப்படையினரே என்பதை உறுதிப்படுத்திவிட்டனர். இது குறித்து ஜூன் 4 ஆம் திகதி நடைபெற்ற அம்பாறை மாவட்ட கண்காணிப்புக்குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டதையடுத்து

இதை மிக மோசமான போர் நிறுத்த உடன்படிக்கை மீறல் என வர்ணித்துள்ள அம்பாறை மாவட்டக் கண்காணிப்புக் குழுத்தலைவர் எர்க்கி பிளட்டன் இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறு அதிரடிப்படையின் பிராந்திய பொறுப்பாளர் ரணவணவிடம் கோரியுள்ளார். தற்போது களுவாஞ்சிகுடி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துவருகிறார்.

ஆனாலும் கூட அம்பாறை மாவட்டத்தில் அதிரடிப்படையினரின் அடாவடித்தனங்கள் குறைந்தபாடாக இல்லை. தொடர்ந்தும் பல இடங்களிலும் மக்களை மிரட்டும் தாக்கும் சம்பவங்களை அதிரடிப்படை தொடர்ந்தவண்ணமே இருக்கிறது.

அம்பாறை கஞ்சிகுடிச்சாறு அதி ரடிப்படையினர். திருக்கோயில் அதிரடிப் படையினர். காரைதீவு அதிரடிப்படையினர் ஆகியோர தம்மீது தாக்குதல் மேற் கொண்டதாகவும், மிரட்டி வருவதாகவும் மக்கள் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். அதிரடிப்படையினர் நினைத்துக் கருதியே இவ்வாறு போர்நிறுத்த உடன்படிக்கையை குழப்பும் விதமாக நடந்துகொள்கின்றனர் என்பதையே இத்தகைய தொடரும் அடாவடித்தனங்கள் நிரூபிக்கின்றன.

அதிரடிப்படையினரின் இத்தகைய செயற்பாடுகள் குறித்து கண்காணிப்பாளர்களூடாக பிராந்திய அதிரடிப்படைப் பொறுப்பாளரின் கவனத்துக்குக் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும் கூட இவை தொடர்வதானது சமாதானச் சூழலை குழப்பக்கூடிய ஒன்றாகவே அமைந்துள்ளது.

உடன்படிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளபடி, படையினர் வசமுள்ள பாடசாலைகள், மற்றும் மதத்தலங்களிலிருந்து வெளியேற மறுத்தல்,புதிதாக பாரிய படைமுகாம்களை அமைத்து வருதல், கடலில் மீன்பிடித்தடைநீக்கத்தை தொடர்ந்தும் இழுத்தடிப்பதுடன் புதிய பல கட்டுப்பாடுகளை விதித்தல், விடுதலைப் புலிகளின் கடல்வழிப் போக்குவரத்துக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தலாக இருத்தல் என படையினரது கெடுபிடிகள் இவ்வாறே தொடருமாயின்,சமாதான முயற்சியின் அடுத்த கட்டமான பேச்சு முயற்சிகளில் ஈடுபடுதல் என்பது பயனற்ற ஒன்றாகப் போய்விடும். மக்கள் தொடர்ந்தும் படையினரது கெடுபிடிகளால் துன்பப்பட்டுக்கொண்டிருக்க புலிகள் ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் எதுகுறித்துப் பேசமுடியும்?

போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் படையினர் தொடர்ந்தும் காட்டி வரும் அசிரத்தை மற்றும் படையினரது போர்நிறுத்த மீறல்கள் பற்றி கடந்த புதனன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின்போது தமிழ்க்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரஸ்தாபித்தபோதும், தனது இந்திய விஜயத்தின்பின்னர் இது குறித்துக் கவனம் செலுத்துவதாக பிரதமர் காலங்கடத்தியுள்ளார்.இது படைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய வல்லமை ரணிலுக்கு இல்லையோ என்ற சந்தேகத்தையே தோற்றுவித்துள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து 100 நாட்கள் கடந்துவிட்ட நிலையிலும்,தொடர்ந்தும் போர்க் காலத்தில் அனுபவித்த சலுகைகளை படையினருக்கு வழங்கிவரும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க படையினருடன் அனுசரித்துப் போகும் ஒரு அணுகு முறையையே கடைப்பிடிக்க விரும்புகிறார் என்பது தெளிவாகியுள்ளது.

இவ்வாறு சாத்தான்களை வீட்டுக்குள் வைத்துக்கொண்டே வீட்டில் சமாதானப் பூஜை நடாத்த முனையும் ரணிலின் முயற்சி ஆபத்தான ஒன்றாகவே இருக்கப் போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற் புலிகளும் சுழல் சூறாவளியும்

சத்தஞ் சந்தடியில்லாமல் இந்த மாதம் 8ம் திகதி இஸ் ரேலியக் கடற்படை புதியதொரு கடற் தாக்குகலமொன்றை வெள்ளோட்டம் விட்டிருந்தது. இஸ்ரேலிய பாதுகாப்புத் துறை யால் 'கடற்படையில் ஒரு புதிய சகாப்தம்' என வர்ணிக்கப்பட்ட மேற்படி படகிற்கு அவர்கள் இட்ட பெயர் 'கெறிவ்' (வாள்). 61 மீற்றர் நீளமுடைய தும், 51 பெயரைக் காவிச் செல்லக் கூடியதுமான மேற்படி விரைவு வேகத் தாக்குகலம் மணிக்கு 32 கடல்மைல் வேகத்தில் பயணம் செய்யக் கூடியது. இதுவே மேலோட்டமாக அத் தாக்குகலம் பற்றிய செய்தி.

இத் தாக்குகலத்தில் அப்படியென்ன சிறப்பு இருக்கிற தென்று சற்று ஆழமாகப் பார்த்தால், இஸ்ரேலிய கடற் படைக் கலங்களில், இக் கலத்தில் தான் முதன்முறையாக 'நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய' 25 மில்லி மீற்றர் பீரங்கி யொன்று பொருத்தப்பட்டு பாவ னைக்கு வருகிறது. அதுவே இக்கலத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட தற்கான காரணம். ஆனால் அத் துடன் இணைந்து வருகின்ற செய்தி தான் எமக்குத் தேவை யானது. ஆம்! இப் பீரங்கி ஏற்கனவே சிறீலங்காக் கடற் படையின் பாவனைக்கு விடப் பட்டு, மிகுந்த பயன்பாடுடையது என அடையாளம் காணப்பட்ட தாம்.

இஸ்ரேலிய அரச ஆயு தத் தயாரிப்பு நிறுவனமான 'ரப சல்' தயாரித்த மேற்படி பீரங் கிக்கு The Typhoon (சுழல் சூறாவளி) எனப் பெயரிடப் பட்டுள்ளது. மிகநவீனமான ஒரு வெப்பத்தை தேடி உணரும் (Sophisticated Thermal Camera) கமராவுடன் இணைக்கப்பட்டுள்ள இப்பீரங்கியின் சிறப்பம்சம் யாதெனில் பீரங்கியை இயக்கு வதற்கு ஒருவர் பீரங்கித் தளத்திற்கு செல்லத் தேவை யில்லை. ஓட்டுதளத்தினுள் இருந்தவாறே இயக்கக்கூடிய இக் கமராவில் ஒரு இலக்கை அடையாளப்படுத்தி ஆளியை அழுத்தினால் போதும். இலக்கு மிகவும் துல்லியமாகத் தாக்கியழிக்கப்படும். இதுவே இவ்வளவு வரவேற்பை பெறுவதற்கான காரணமும்.

ஓயாத அலைகள்-3ன் தாக்கத்திலிருந்து மீளும் பொருட்டு, 2000ம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் ஆறு சுப்பர் டிவொராப் படகுகள் சிறிலங்கா வினால் வாங்கப் பட்டன. அவ்வாறு வாங்கப்பட்ட மேற்படி சுப்பர் டிவொராப் படகுகளில் மேற்படி பீரங்கி முதன்முறையாகப் பொருத்தப் பட்டது. அவ்வாறு பொருத்தப்பட்ட விடயம் மறைக்கப்பட்டது அல்லது அடக்கி வாசிக்கப்பட்டது. அதற்கான காரணம் பரீட்சார்த்த முயற்சியில் இதன் சூட்டுவலுவின் துல்லியத்தை மற்றும் பெறு பேற்றை கண்டறிவதற்காகவே. அத்தோடு மேற்படி கலங்களில் ஒரு புதிய ராடாரும் (EL/M-2228X Surveillance & Gunnery Rader System) பொருத்தப் பட்டிருந்தது.

போர்க்காலங்களில் மேற்படி 'நவீனங்களின்' உபயோ கத்தை தேவையான அளவில் பெறக்கூடிய நிலையில் சிங்களப் படைகளை கடற்புலிகள் எப்போதுமே விட்டு வைத்ததில் லை. சமர்களின் போது ஓடி ஒளித்துக் கொள்வதற்கான தந்திரங்களையே கையாளும் கடற்படை. போர் நிறுத்த காலத்தில் மீனவப் படகுகள் மீது மேற்கொண்ட தாக்குதல்களின் போதே மேற்படி நவீன பீரங்கியின் தாக்குதிறன் கண்டறியப்பட்டதோ என்ற சந் தேகம் தவிர்க்க முடியாதபடி எழு கிறது. குறிப்பாக மே 1ம் திகதி வாகரையில் இரு படகுகள் தாக்கியழிக்கப்பட்டு மேலும் சில படகுகள் தாக்கப்பட்டதையும் இதனுடன் இணைத்துப் பார்க்க வேண்டியது இன்றியமையாத தாகின்றது.

ஏனெனில், பரீட்சார்த்த ரீதியில் பாவிக்கப்பட்ட இவற்றில் எதிர்பார்த்த அளவு பயன்பாடு பெறப்பட்டதாக இஸ்ரேலியப் பாதுகாப்புத்துறை தெரிவித்ததில் உண்மையில்லாமல் இருக்க முடியாது. ஆகவே, சண்டைக்களங்களில் பெரிதாக எதையுமே சாதிக்காத சிறீலங்காக் கடற்படை போர்நிறுத்த காலத்தி லேயே இந்த ஆயுதங்களின் பயன்பாட்டினைப் பெற்றது என்ற எமது நிலைப்பாட்டில் நியாயம் இருப்பதையே காலமும் காட்டி நிற்கிறது. தரையிலும், வானிலும் போர் ஓய்ந்திருக்க கடல் மட்டும் எப்பொழுதுமே 'கொந்தளிப்பாக' இருப்பதற்கு வேறு எதையுமே காரணமாகக் காட்ட முடியாதபடி கடற்படை செய்கிற தொந்தரவுகள் அளவுகடந்து நிறைந்திருக்கின்றன.

எனினும், சிறிலங்காக் கடற்படைத் தளபதியினதும், பாதுகாப்பமைச்சரினதும் கருத் துக்கள் 'இஸ்ரேலிய வரவேற் புக்கு' முற்றிலும் மாறுபட்ட வையாக அமைந்திருக்கின்றன. மார்ச் முதல்வாரத்தில் சிறிலங்காப் பாராளுமன்றில் பாதுகாப்பமைச்சர் தெரிவித்திருந்த கருத்துக்கள் மேற்படி 'நவீன ஆயுதப் பாவனை வெற்றி'க்கு முற்றிலும் மாறுபட்டதாக அமைந்திருக்கிறது. கடற்படைத் தளபதி தயானந்த சந்திரகிரி யுடைய அறிவுறுத்தலில் பாதுகாப்பமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்த செய்தி என்னவென்றால், கடற்புலிகள் சிறீலங்காக் கடற்படையை விடச் சிறந்த சுடுகலன்களை வைத்திருக்கிறார்கள் என்பதே. இதையே மறுபுறமாகச் சொன் னால், சிங்களக் கடற்படை பலமற்ற நிலையில் இருக்கிறது. பலப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது என்பதே அமைச்சரின் கூற்றாகும்.

கடற்படைத்தளபதி, பாதுகாப்பமைச்சர் ஆகியோரின் கூற்றுக்கள் ஏதோ வெறுவாய்ச் சவடாலல்ல. கடற்புலிகளின் பலத்தை நிரூபிக்கிற சண்டை யொன்று கடந்த ஆண்டு செப்டம்பரில் (16-09-2001) ஆழ்கடலில் இடம்பெற்றிருந்தது. கரையிலிருந்து 26 கடல்மைல் தொலைவில் சென்று கொண்டி ருந்த ஒரு கடற்படைத் தொகுதியை (ஆழ்கடல் ரோந்துக்கப்பல்-2, துருப்புக்காவி-1, சரக்குக்கப்பல்-1, சுப்பர் டிவொரா-10) வழிமறித்து காலை 7 மணி முதல் நண்பகல் 1 மணி வரை சண்டையிட்டிருந்தார்கள். இச் சண்டையில் 2 டிவொராக்கள் மூழ்கடிக்கப்பட்டு, 4 சேதமாக்கப்பட்டன. இச்சண்டை

புதிய டிவொராக்கள் மற்றும் வெப்ப உணர் பீரங்கி ஆகியவற்றின் வரவின் பின்பே இடம்பெற்றது என்பது இங்கு நோக்கத்தக்கது.

அதுகூட 2000ம் ஆண் டில் சிறிலங்காக் கடற்படையின ரால் கொள்வனவு செய்யப்பட்ட மேற்படி சுப்பர் டிவொராப் படகுகள் (Super Dvora MK II) கலமானது உலகிலுள்ள அதிவேக தாக்குதற் கலங்களில் (XFAC - Extra Fast Attack Craft) முதன்மை வகிக்கும் ஒரு கலமாகும். இதுகூட சிறிலங்காக் கடற்படைக்கே முதன் முதலாக விற்பனை செய்யப்பட்டது. அதன்பின்பே இஸ்ரேலியக் கடற்படை கூட இதனைப் பாவ னைக்கு இணைத்துக் கொண் டது. இவ் டிவொராப் படகுக ளுடன் ஆழக்கடலில், மறை வெடுத்துக் கொள்ள முடியாத மாபெரும் சமுத்திரத்தில் விடிகாலை தொடங்கி இருள்சூழ் மாலை வரைத் தொடர்ந்த கடற்சமர்களின் போது மூழ்கடிக்கப்பட்ட, சேதமாக்கப் பட்ட கலங்கள் கடற்புலிகளு டனான சமரில் இவற்றின் பயன்பாடு பூச்சியமாக இருந்த தையே எடுத்துக் காட்டியது.

எனவே, சிறிலங்காக் கடற்படையானது தனது நிரந் தரத் தலையிடியான கடற்புலி களின் மேலாதிக்கத்தை தடுக்கு முகமாகவே அல்லது தாற்காப்பை உறுதிப்படுத்துமுக மாகவே இவ்வாறான நடவடிக் கைகளை மேற்கொள்கிறது என்கிற கருத்து சாதகநிலை யுடையதாக உள்ளது. போர் நிறுத்தம் நடைமுறையி லிருக்கும் காலத்தில் மேற் கொள்ளப்படும் வழிமறிப்புக்கள், தாக்குதல்கள் என்பன சிங்களப் படைகளின் மனோபயத்தின் வெளிப்பாடா அல்லது மம தையின் வெளிப்பாடா என்பது அவர்களுக்கே தெரிந்த உண் மையாக இருந்தாலும், அண் மைக் காலமாக கடற்படை மேற் கொள்ளும் நடவடிக்கை கள் அனைத்துமே 'கடற்பரப்பில் மேலாதிக்கத்தை பேணல்' என்ப தை மையமாக வைத்தே மேற் கொள்ளப்படுகின்றன என்பது வல்லாளர்கள் கருத்தாக அமையப் பெற்றுள்ளது.

ஆக மொத்தம், இப்போதைக்கு ஆறுதல் தரக் கூடிய செய்தி என்னவென்றால், பேச்சுவார்த்தையை முறித்து சிறீலங்கா போரை ஆரம்பித் தால், கடற்புலிகள் ஆகக் குறைந்தது ஆறு நவீன பீரங்கி களை ('சுழல் சூறாவளி') பெறு வார்கள் என்பதே.

**-சுதர்மா-**








இலங்கைத் தீவின் 25 மாவட்டங்களில், 14 மாவட்டங்கள் கடற்தொடர்புடையவை. அவ்வாறான கரையோரத் தொடர்புள்ள 14 மாவட்டங்களில் 7 மாவட்டங்கள் தமிழீழப் பரப்பை சார்ந்தவை. அதாவது தமிழீழத்தில் வவுனியா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் கடற்தொடர்புடையவை. மொத்தக் கரையோரப் பிரதேசங்களில் 65 விழுக்காட்டிற்கு மேலான பிரதேசம் இம்மாவட்டங்களிலேயே அடங்குகிறது.

இவற்றில், யாழ் மாவட்டத்தில் தீவகம், காரைநகர், காங்கேசன்துறை உள்ளிட்ட சில பகுதிகளும், மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் உள் ளிட்ட சில பகுதிகளும் மற்றும் திருக்கோணமலை மாவட்டத்தில் துறை முகம் உள்ளிட்ட சில பகுதிகளுமே சிறீலங்காக் கடற்படையின் பாவ னையிலுள்ளவை. இவை தவிர்ந்த தமிழீழக் கடற்பிரதேசங்கள் யாவும் கடற்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவை. அத்தோடு புத்தளம் உள்ளிட்ட கரையோரத் தொடர்புள்ள ஏனைய 7 மாவட்டங்களும் கடற் புலிகளால் இலகுவில் அணுகப்படக் கூடியவையே என்பது ஏற்கனவே நிரூபிக்கப்பட்டாயிற்று.

இவ்வகையில் பார்த்தால், இலங்கைத் தீவின் 1340 கிலோ மீற்றர் நீளமான கடற்கரையையோரம் மற்றும் தமிழீழத்திற்கும் - சிறீலங்காவிற்கும் சொந்தமான 21,700 சதுரக் கிலோ மீற்றர் கடற் பரப்பு, தமிழீழம் - சிறீலங்கா ஆகியவற்றின் நேரடிக் கண்காணிப்பிற்குட்பட்ட 465,800 சதுரக் கிலோ மீற்றர் நீர்ப்பரப்பளவையுடைய பிரத்தியேக பொருளாதார வலையம் (Exclusive Economic Zone - EEZ) ஆகியவற்றில் பெரும்பகுதி கடற்புலிகளின் ஆளுகைக்குள்ளேயே இருந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
பொதுசன நூலகம்

# புதிய வாழ்வு பிறக்கட்டும்

## எழுச்சிக்குரல்

கோ.துரைகுமாரன்

தேச விடுதலை கோரிப் போராடும் தேசத்தவர்களாகிய நாம் உலக விடுதலைப் போராட்ட வரலாற்றிலிருந்து கற்றறிய நிறையவே உண்டு. தமிழீழ விடுதலைப் போராட்டமானது தனித்துவமான பாதை வகுத்துப் பயணிப்பதாக அமையினும் கடந்து போன உலக வரலாறுகளை மீட்டுப் பார்ப்பது பயனளிக்கவே செய்யும்.

இவ் வகையில் துன்பம் மிகு வந்த போதும் துவண்டிடாத கியூப மக்களின் போராட்ட வரலாறு மிகச்சிறந்ததொரு உதாரணம். கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலரும் கியூப அதி பருமான ஃபீடல் காஸ்ரோவின் உரைகள் வீரஞ் செறிந்தவை; யதார்த்த பூர்வமானவை. டிசம்பர் 16, 1991இல் காஸ்ட்ரோ நிகழ்த்திய "அமெரிக்காவிற்கு அடி பணிய மாட்டோம்" என்ற உரை யின் இன்னும் சில பகுதிகளை இவ் விடத்தில் மீட்டுப்பார்ப்போம் –

"...... மாபெரும் சுதந்திரப் போரின் மீதம் இன்று என்ன இருக்கிறது? இன்று அதைப்பற்றி யார் பேசுகிறார்கள்? அந்த வீரசாகசப் போரால் கவரப்பட்டு,அதனால் பல பாடங்களை படித்தவர்கள் தாமே நாம் அனைவரும்? அதில் இன்னும் என்ன மீதி இருக்கிறது? அதில் பலியான எண்ணற்றவர்களின் உயிர்களுக்கு அளிக்கப்பட்ட விலை என்ன? நம்மைப் பொறுத்தவரை இவற்றை பொறு த்துக்கொள்ள முடியாது.

"நம் வளர்ச்சிக்குத் தேவையான குறிப்பிட்ட வளங்களை நாம் பெற்றிருப்பது இன்றியமையாதது, ஏனெனில் இங்கு நாம் தடுத்துப் போராடி வளர்ச்சியடைய வேண்டிய நிலையில் உள்ளோம். நம்முடைய பலமெல்லாம் நம்மால் சேகரிக்கப்பட்ட அறிவுச் சொத்துதான். இது நமது புரட்சி நமக்கு அளித்த வரப்பிரசாதம். ஒன்றுபட்ட ஐக்கியத்துடன் இயங்கிய ஏராளமான மூளைகளின் இயக்கத்தை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. நம் மக்களின் தேசாபிமான, புரட்சிகர ஆக்க சக்திக்கு எவரும் அணை போட முடியாது.

"இப்பொழுது தூக்கிச் சுமக்கும் பெரும் சுமை நம் தோள்களின் மீது விழுந்தது. நாம் அதை எதிர்பார்த்து அதற்காக காத்திருக்கவில்லை. நம் மக்கள் 100 வருடங்களுக்கும் மேலாக நடத்தி வந்த போராட்டத்தின் விளைவுதான் இது; சுதந்திரத்திற்காக, விடுதலைக்காக, வளர்ச்சிக்காக நமது நாடு நடத்திய போரா ட்டத்தின் விளைவுதான் இது.

"இந்த மதிப்புகளை, இந்த குறிக்கோள்களை பாது காக்கும் பொறுப்பு இன்று நம் மக்களின் தலை மீது விழுந்துள்ளது. புகழுக்காக, பெருமைக்காக எதையும் செய்ய நமது நாடு தயாராக இல்லை. நாம் புகழுக்காக யாசிக்கவில்லை; வரலாறு ஒரு பிரதான பாத்திரத்தை நம்மீது திணிக்கிறது, நாம் ஒற்று மையாக, தைரியமாக, புத்திசா லித்தனமாக களத்தில் இறங்கி னால், வெற்றி உறுதி என்பதில் துளியும் சந்தேகம் கிடையாது.

"நமக்கு வருங்காலத்தில் என்ன தேவையோ அதை நாமே கையால், நாம் வியர்வையையும் இரத்தத்தையும் சிந்தி நம் அறிவுத் திறமையால் வளர்த்தெடுப்போம். நம்மால் பல விஷயங்களை செய்ய முடியும்; நம்மால் வெகுதூரம் போக முடியும். ஏனெனில் பிறரிடம் இல்லாதது நம்மிடம் இருக்கிறது; அது தான் நாம் சமுதாயத்தில் இதுவரை சேர்த்து ள்ள திறமை வளம்; அறிவுச் சொத்து. நம்மிடம் இருப்பவைகளைக் கொண்டு, நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் நாம் சாதிக்கலாம்.

"பிறரின் ரொட்டியைச் சார்ந்து வாழும் காலம் நமக்கு ஒரு போதும் வராது. அதுவும் அமெரிக்காவிடம் கையேந்தி நிற்கும் காலம் வரவே வராது, மிச்சம் மீதியைப் பொறுக்குவது சிலருக்குப் பழக்கமான ஒன்றாக இருக்கலாம். ஆனால், நம் மக்கள் நமது புரட்சியாளர்கள் ஒரு போதும் இந்த ஈனத்தை ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

"அமெரிக்காவினால் நம்மைப் பணிய வைக்கமுடியாது. நம் நாட்டில் தன்னுடைய உன்னத லட்சியத்தைக் காக்கப் போராடிக் கொண்டிருக்கும் புரட்சிவாதிகளில் கடைசி நபர் இருக்கும்வரை இது சாத்தியமே இல்லை. இது இதற்கு முன்பு அவர்கள் வேறெங்கும் சந்தித்த அனுபவங்களைப் போல இருக்காது. இங்கு இருப்பது லட்சக் கணக்கான ஆண்களும், பெண்களும்.இவர்கள் தங்களின் மனித மேன்மையை ஏற்கனவே நிருபித்து விட்டவர்கள். போராடத் தயாராக இருக்கும் இம்மக்களைத் தோற்கடிப்பது கடினமான காரியம். அரைகுறை சண்டைகள் இனியும் கிடையாது; அமெரிக்காவினால் எங்களை அடிபணிய வைக்க முடியாது."

இலங்கைத்தீவில் அமெரி க்கப் படைத் தலையீடு தொடர்பாக பட்ட வர்த்தனமான செய்திகள் வெளியாகும் வேளையில், "இலங்கையின் இறைமை" பற்றி தொண் டை கிழியக்கத்திய பேரினவாதிகள் "அமைத்தி வாசிக்கும்" சந்தர்ப்பத்தில், நான்கு தசாப்தகால பொருண்மியத் தடையை எதிர் கொண்டும் "நெஞ்சு நிமிர்த்திய வாழ்வு" வாழும் கியூபப் புரட்சித் தலைவரின் மேற்போந்த உரையின் நிதர்சனத்தன்மையை நாம் நன்குணர்ந்து கொள்வோம்.

"தேடி அடைவாய்" எனுந் தலைப்பிலான "அம்புலி" எனும் தமிழீழ விடு லைப் புலிப் பெண் போராளியின் கவிதை "எழுச்சிக்குரல்" ஆக ஒலிக்கின்றது. கப்டன் வானதி வெளியீட்டகத்தின் முதலாவது வெளியீடாக ஆவணி 2001 இல் வெளியான "எழுதாத உன் கவிதை தமிழீழப் பெண்களின் கவிதைகள்" என்ற நூலிலிருந்து நன்றி யுடன் இக் கவிதை பெறப்படுகின்றது.

"'பசுமைப்' போர்வையிழந்து
சாம்பல் கவிந்த
மேனிய ளாயுள்ளேன்.
மாரிக் குளிரில் நனைந்திடினும்
தணல் பூத்துக் கிடக்கிற தெனதுள்ளம்.

துன்பத்துக்கும் துயரத்துக்கும் நடுவில்
உன்னை வாரியணைக்க முடியாத
தாயானேன் நான்.
ஒரு அழகிய காலையை
உனக்குக் காட்ட முடியாத
வசந்த காலத்தில்
விளையாடமுடியாத
பாலைவன நாட்களையே
உனக்குப் பரிசளிக்கின்றேன்.

எந்நேரமும் வீழ்ந்து வெடித்து
உயிர் குடிக்கும் எறிகணைக்குள்
முகில் கலைத்து வானிரையும்
எமதூதப் பறவைகளின்
வருகைகளிற் கிடையில்
துப்பாக்கி வெடியோசையின்
சத்தங்களுக்கிடையில்
எப்படி என்னால்
இனிமையை எனக்குத் தரமுடியும்.

என்னால் பரிசளிக்க முடியாத வாழ்வை
நீயே சென்றடைவாய்!

விழிகளில் சிவப்பும்
இறக்கைகளில் நெருப்பும்
உனக்குச் சொந்தமாகட்டும்.

எம்மை வேகவைத்த காலம்
உன்னால் வேகி சாம்பராகட்டும்.
ஒரு புதிய வாழ்வு
உன் கரங்களில் பிறக்கட்டும்!"

# மெழுகிப் பேசுவதில் திருகோணமலை, மூதூர் மக்கள் சாமர்த்தியசாலிகள்...!

## அரசியலில் ஓர் எழுத்தாளரின் அனுபவம்

அருண்

(தொடர்ச்சி...)

மூதூரில் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியோ ஏனைய கட்சிகளோ பிரசாரத்துக்குப் போகக் கூடியதான சூழ்நிலை அமைந்திருக்கவில்லை. பூரண இராணுவக் கட்டுப்பாடு உள்ள பகுதிகளில் எல்லா கட்சிகளும் கொட்ட மடித்துக் கொண்டன. ஆனால் விடுதலைப் புலிகள் சாதாரணமாகவே வந்து போகக்கூடியதாக அமைந்த கிராமங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியினால் மட்டுமே பிரசாரத்துக்காகச் சென்று வரக்கூடியதாக அமைந்தது. விடுதலைப் புலிகள் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வந்து தேர்தல் பிரசாரங்களைச் செய்வதற்கு மறுப்புத் தெரிவிப்பார்களோ என்று ஐயம் ஏற்பட்ட இடங்களில் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்குத் துணை நின்று தைரியம் கூறினார்கள். குறிப்பாக நடுத்தர வயதைக் கடந்த அனைவருமே தமிழர் விடுதலைக் கூட்டணி மேல் தீராத பற்று வைத்திருந்தார்கள். முழுமையாக இளைஞர்கள் ஆர்வம் காட்டாதபோதிலும் பிரசாரத்துக்காகச் சென்ற வேட்பாளர்கள் திருப்தியடையக் கூடிய விதத்தில் இளைஞர்கள் ஆதரவு இருந்தது. பலர் தேர்தலில் தங்களால் வாக்களிக்க



முடியும் என்ற கருத்தைக் கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் வாக்களிப்பில் தாங்கள் கலந்து கொண்டால் இந்த வாக்குகள் கூட்டணியைத் தவிர வேறு கட்சிக்குப் போகாது என்பதை மட்டும் உறுதியிட்டுக் கூறினர். மனம் திறந்து குறைநிறைகளைச் சொல்லவோ கேட்கவோ கூடியதாகத் தமிழர்களுக்கு வாய்ந்த ஒரே கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டுமே என்பதையம் உரத்து வெளிப்படுத்தின.

மூதூர் நகர்ப்புற மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி மேல் காரசாரமான விமர்சனத்தைக் கொண்டிருந்ததை அவன் பல இடங்களில் அவதானித்தான். அவர்களது விமர்சனங்கள் திருக்கோணமலை நகரத்து மக்கள் சிலரிடம் காணப்பட்ட விமர்சனங்கள் போன்றே சுய நலத்தின் அடிப்படையில் அமைந்திருந்ததையும் அவன் கண்டான். எனினும் சுயநலத்தை மறைத்துப் பொதுநல நோக்கம் கொண்டவர்கள் போல் மெழுகிப் பேசுவதில் திருக்கோணமலை நகர மக்களாக இருந்தாலென்ன மூதூர் நகர மக்களாக இருந்தாலென்ன அதி சாமர்த்திய சாலிகளாகவே காணப்பட்டவர்கள். அவர்களை வாதிட்டு மடக்குவது அவ்வளவு சிரமமானதல்ல என்று அவன் உள் மனம் கூறிக் கொண்டிருந்த போதிலும் குளிக்க வந்த இடத்தில் சேறு பூசிக் கொள்ள அவன் விரும்பாததால் தாராளமாகவே அமைதி காத்தான்.

ஒரு பெண்மணி மூதூர் நகரில் வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி பற்றி வலிந்து வந்து விமர்சனம் செய்து கொண்டிருந்தார். அவனோ, கூட நின்றவர்களோ இந்தப் பெண்ணின் பிழையான விமர்சனத்தை ஏற்றுக் கொள்ளாத போதிலும் பேச்சைத்திசைதிருப்பி விடலாமா என்பதிலேயே தங்கள் கவனத்தைக் செலுத்திக் கொண்டிருந்தனர். அந்தப் பெண்ணை மடக்க முனைந்தால் நீண்ட நேரம் தேவைப்படும். விளக்கங்கள் பல கொடுக்கவேண்டி ஏற்படும். இவை மனஸ்தாபங்களில் கூட முடியலாம் என எதிர்பார்த்ததாலேயே பேச்சைத் திசை திருப்பும் முயற்சியில் கவனம் செலுத்த வேண்டி ஏற்பட்டது.

அந்த நேரம் பார்த்து குணநாயகம் ஐயா "புறப்படலாமா தம்பிமாரே" என்று கேட்டுக் கொண்டு வந்தார். இவர் மூதூரில் விதானையாராக இருந்து ஓய்வு பெற்றவர். கட்டைபறிச்சான் கிராம சபையில் தலைவருமாக இருந்தவர். மூதூரில் ஒவ்வொரு பிரஜையைப் பற்றியும் தெளிவாக அறிந்து வைத்திருப்பவர். திருகோணமலையிலிருந்து தேர்தல் வேலைகளுக்காக அவன் வந்த குழுவினருடன் இணைந்திருந்தார். இந்தப் பெண்மணியின் பேச்சை இரண்டொரு நிமிடங்கள் அவர் அவதானித்தார். அவருக்கு கோபம் வந்து விட்டது. அந்தப் பெண்ணைப் பார்த்து தன்னூடாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் அந்தப் பெண்மணி பெற்றுக் கொண்ட பல உதவிகளை நினைவுபடுத்தினார். இவ்வளவு உதவிகளையும் பெற்றுக்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை வசை பாடும் உங்களுக்கு நன்றி உணர்வு கூட இல்லையா, என்று காரமாகக் கேட்டு வைத்தார். பெண்மணி அடங்கிப்

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூர இடப் பயணமென்றால் வன்னியில் அது முயற்கொம்பு. போதியளவு வாகனவசதிகள் இல்லை. எரிபொருள்தடை, உதிரிப்பாகங்கள், டயர்கள், பற்றரிகளுக்கான தடைகள் என்பவற்றின் மத்தியில் வாகனப் போக்குவரத்துப்பற்றி என்னசொல்வது?.

பெற்றோல் பற்றி நினைத்துப்பார்க்க முடியாது. அவ்வளவு விலை. அதற்குப்பதிலாக மண்ணெண்ணையிலேயே வாகனங்கள் இயங்குகின்றன. அதன் விலையோ ஒரு காலத்தில் 150-200ரூபாவாகவும் இருந்தது. இந்த நிலையில் போக்குவரத்துப்பற்றி என்ன சொல்லமுடியும்? இருந்தாலும் மண்ணெண்ணையில் மோட்டார் சைக்கிள்களும் வண்டிகளும் ஓடித்திரிகின்றன.

பஸ் போக்குவரத்தும் அங்கு ஒரு பெரிய பிரச்சனை. அரசாங்க போக்குவரத்துச் சபையின் சேவைகள் இல்லாத அந்த மண்ணில் விடுதலைப் புலிகளின் தமிழீழ போக்கு வரவுக் கழகம் நடாத்தும் பேரூந்துப் போக்குவரத்துச் சேவையே அங்குள்ள மக்களின் நம்பிக்கைக்குரிய ஒரேயொரு போக்குவரத்து வசதி. இதுதவிர சில தனியார் போக்குவரத்து வண்டிகளும் அங்கு சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளன.

தமிழீழ போக்குவரவுக் கழகத்தைப் பொறுத்தவரையில், அது தன்னிடமுள்ள மிகக் குறைந்த வளங்களை வைத்துக்கொண்டு இயன்றவரையில் வன்னி மக்களுடைய தேவைகளை ஈடுசெய்ய முயன்று வருகிறது எனலாம்.

மிகக் குறைந்தளவு வண்டிகளையே கொண்டுள்ள அவர்கள் அங்கே குறிப்பிடக் கூடியளவு சேவைகளைத் தொடர்ச்சியாக நடாத்துகின்றனர்.

வன்னியைப் பொறுத்தவரையில் அதன் பிரதான நகரங்களாக இருப்பது, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, ஸ்கந்தபுரம், மாங்குளம், மல்லாவி, துணுக்காய் என்பனவாகும். இவற்றுள்ளும், கிளிநொச்சி இடையில் நீண்டகால படை ஆக்கிரமிப்புக்குள் இருந்ததனால், புதுக்குடியிருப்பே விடுதலைப்புலிகளின் நிர்வாக மையமாக நீண்டகாலம் இருந்து வந்தது. இப்போது மீண்டும் கிளிநொச்சி நகர் எழுச்சி கண்டுவருகின்றபோதும், இன்னமும் நிர்வாக மையமாக புதுக்குடியிருப்பே இருந்து வருகிறது.

தமிழீழப் போக்குவரவுக் கழகத்தின் தலைமை அலுவலகமும் புதுக்குடியிருப்பிலேயே அமைந்துள்ளது. இங்கிருந்தே வன்னியின்சகல பகுதிகளுக்குமான பேரூந்து போக்குவரத்துக்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, புதுக்குடியிருப்பிலிருந்து, கிளிநொச்சி, மல்லாவி, புளியங்குளம், முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு பேரூந்துகள் செல்கின்றன.

இதிலும் உள்ள துயரம் என்னவென்றால், ஜெயசிக்குறு படை நடவடிக்கையால் பாதைகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சில இடங்களுக்கான போக்குவரத்து சுற்றிவளைத்தே மேற்கொள்ளப் படுகின்றன.

உதாரணமாக புதுக்குடியிருப்பிலிருந்து மல்லாவி செல்ல வேண்டுமாயின் இரண்டு பாதைத் தெரிவுகள் உண்டு. ஒன்று, புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டுசுட்டான் சென்று மாங்குளம் முல்லைத்தீவு வீதியூடாக மாங்குளம் போய் அங்கிருந்து மல்லாவி செல்லல். இதுவே இலகுவான பாதை.

மற்றையது, புதுக்குடியிருப்பிலிருந்து, பரந்தன் வீதியூடாக கிளிநொச்சி போய் அங்கிருந்து மாங்குளம் ஊடாக மல்லாவிக்குச் செல்லல். இதிலும் கிளிநொச்சியிலிருந்து மாங்குளம் போய்வர எடுக்கும் தூரத்தைக் குறைப்பதற்காக, அக்கராயன் ஊடாக நட்டாங்கண்டல் ஊடாய் துணுக்காய் ஊடாக மல்லாவி செல்லும் காட்டுப்பாதையே கூடுதலாகப் பயன்படுத்தப்படுகிறது.



# தகவல் யுகத்தில் வன்னி

பின்னைய இரு பாதைகளும் சுற்றிவளைத்த நீண்டதூரம் கொண்டவையாக இருந்தபோதும், அந்தப் பாதைகளே புதுக்குடியிருப்பு-மல்லாவி போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஒட்டுசுட்டான் ஊடாகச் செல்லும் மாங்குளம்- முல்லைத்தீவு வீதி ஜெயசிக்குறு படை நடவடிக்கை காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு குண்டுங் குழியுமாகக் காட்சி தருகிறது. இந்தப் பாதையூடாக வாகனப் போக்குவரத்து நடைபெறவே முடியாதளவுக்கு அது மோசமாக உள்ளது.

இங்கேதான் நாம் முக்கியமான ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது.

அதாவது, எரிபொருள் தடை வாகனத்தட்டுப்பாடு, உதிரிப்பாகங்கள் இல்லாமை என பல்வேறு நெருக்கடிகளையும் தாண்டி, வாகனப் போக்குவரத்தை மேற்கொள்ள முயன்றாலும், பயணம் செய்வதற்குரிய நிலையில் வீதிகள் இல்லாமையால் வாகனப்போக்குவரத்து இங்குமோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளது.

மனித நாகரிகத்தின் வளர்ச்சியென்பதே நிலப்பரப்புக்களிடையேயான தொடர்புகளினூடாகவே ஏற்பட்டது. பல்வேறு இடங்களிலுள்ள மக்களும் தம்மிடையே தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டபோதே தகவல் தொடர்புகளும் வளர்ந்து கொண்டுகொடுத்தல் ஊடாக நாகரிகம் வளர்ச்சியடைந்தது. இந்த வளர்ச்சியேகற்கால மனிதனை தற்காலமனிதனாக்குவதில் பெரும்பங்கு வகித்தது என்றால் மிகையல்ல.

இவ்வாறு நிலப்பரப்புக்களிடையே தொடர்புகள் ஏற்படுவதற்கு போக்குவரத்துப் பாதைகள் பிரதான ஊடகமாக இருந்தன. இதுவே மனிதனது முதலாவது தொடர்பாடல் ஊடகம் என்பதுவும் பொருந்தும். பின்னர் கடல்கடந்த பயணப்பாதைகளும் கண்டு பிடிக்கப்பட்டபோதே நாடுகளிடையேயும் தொடர்புகள் வளர்ந்து மனித நாகரிகம் துரிதவளர்ச்சி கண்டது.

வன்னிப் பெருநிலப்பரப்பைப் பொருத்தவரையில், அது, தனக்குள்ளேயே இத்தகைய நிலத்தொடர்புகள் சீராக இல்லாமலே இருந்துவருகிறது. இதனால்தான் வன்னி கற்கால நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது என நான் வாதிடுகிறேன்.

மனித நாகரிகத்தின் வளர்ச்சியென்பது தொடர்பாடலின் வளர்ச்சியுடன் சேர்ந்தே சாதிக்கப்பட்டு வந்துள்ளது. போக்குவரத்துப் பாதைத் தொடர்புகள் ஏற்பட்டபோது, உலகின் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கும் மக்களிடையே தகவல்தொடர்புகள் வளர்ச்சிகாணத் தொடங்கியது. பின்னர் அது துரித தகவல் தொடர்புகளாக, ஆரம்பத்தில் தகவலாளர்கள் ஊடான தகவல் பரிமாற்றம், பறவைகள் மூலமான தகவல் பரிமாற்றம், தபால் தொடர்புகள், தந்தி, தொலைபேசி, தொலைநகல் என வளர்ந்து இன்று இணைய யுகத்தில் வந்து நிற்கிறது. இவ்வகையில், மனித நாகரிக வளர்ச்சியென்பது இந்தத் தகவல் தொடர்பு வசதிகளின் வளர்ச்சியுடன் பின்னிப்பிணைந்துள்ளது. இன்றைய யுகத்ததை, ''தகவல் யுகம்'' என வர்ணிக்குமளவுக்கு தகவல்தொடர்பு மனிதகுல வளர்ச்சியிலும் வரலாற்றிலும் முக்கியஇடம் வகிக்கிறது.

இந்தக் கண்ணோட்டத்தில் நாம் வன்னியைப் பார்ப்போமானால் அது தகவல் தொடர்பு யுகத்தின் ஆரம்பக்கட்டமான போக்குவரத்துப் பாதைகளூடான தொடர்புகள் என்ற அம்சத்திலேயே பின்தங்கியிருப்பதையே நாம் காண்கிறோம்.

இப்போ உடன்படிக்கையின்பின்னர் ஏற்பட்டுள்ள சில மாற்றங்களை விட்டுநோக்கினால், வன்னியானது, நிலப்பரப்பு ரீதியாக தீவின் ஏனைய பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டு மொத்த உலகிலிருந்தே தனிமைப்படுத்தப் பட்டிருந்துள்ளதுடன்,அது தனது நிலப்பரப்புக்குள்ளேயும்கூட தொடர்புகள் ஏதுமற்ற சிறு குட்டித் தீவுகளாகவே துண்டாடப்பட்டிருந்துள்ளதை அவதானிக்கலாம்.

இப்போது உடன்படிக்கையின் பின்னர் நிலைலை எவ்வளவோ மாற்றமடைந்துவிட்டது என ஊடகங்களிலெல்லாம் தீவிரமாகப்பிரசாரப்படுத்தப்படுகிறது.

பாதைகள் திறக்கப்பட்டு விட்டன, பொருளாதார, போக்குவரத்துத் தடைகள் நீக்கப்பட்டு விட்டன என இயல்பு வாழ்க்கை வழமைக்குத் திருப்பி வருவதாக ஊடகங்கள் முழக்கமிடுகின்றன. ஆனால் வன்னியின் இந்தப் பிரதான அவலத்தில் ஏதும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாவெனில் இல்லை.

இந்தச் சமாதான முயற்சிகளின் பிரதான சாதனையாக வர்ணிக்கப்படுவது யாழ்-கண்டி பிரதான போக்குவரத்துப் பாதையான ஏ-9 பாதை திறக்கப்பட்டு போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளமையேயாம். (பாதைத் தொடர்புகளின் முக்கியத்துவத்தை விளக்க இந்த உதாரணம் ஒன்றேபோதும்.) இந்தப் பாதை திறப்புக்கூட உண்மையில் யாருக்கு நன்மை பயத்துள்ளது என்பதே இங்கு முக்கியமான விடயமாகும். ஏ-9 பாதை திறக்கப்பட்டதன்மூலம் நீண்டகாலம்குடாநாடு மற்றும் வன்னிப் பெருநிலப்பரப்புக்களிடையே துண்டிக்கப்பட்டிருந்த நிலத்தொடர்பு சீராக்கப் பட்டுள்ளது. ஆனால் இது குடாநாட்டுக்கும், தீவின் தென்பகுதிகளுக்கும் நன்மைபயத்த அளவுக்கு வன்னிக்குப் பெரியளவு பயனெதையும் பெற்றுத்தரவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

உண்மையில் தற்போது சீரமைக்கப்பட்டிருப்பது,யாழ் குடாநாட்டுக்கும், தென்பகுதிகளுக்குமான போக்குவரத்துப் பாதையேதவிர வேறொன்றுமில்லை. இந்தப்பாதை வன்னியை ஊடறுத்துச் செல்வதால் வன்னியும் சில பயன்களைப் பெற்றுள்து என்றே கூற வேண்டும்.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின் தற்போது தென்பகுதி வர்த்தகரின் குடாநாட்டு வியாபாரம் சீராக்கப்பட்டுள்ளது. முதலீடுகள் தற்போது யாழ்ப்பாணத்தில் குவிகின்றன.

**மட்டக்களப்பு காத்தான்குடி வர்த்தகர் யாழ்ப்பாணத்தில் வியாபாரத்தை ஆரம்பித்து பி.பி.சீ.யில் பேட்டிகொடுக்கும் அளவுக்குநிலமை மாற்றமடைந்துள்ளது.**

ஆனால் இவை வன்னிக்குஎன்ன பலாபலன்களைத் தந்துள்ளன?இந்தப் பாதைத்தொடர்புகளால் வன்னி அடைந்துள்ள இலாபம் என்ன?

தற்போது அரசாங்கம் ஏ-9 பாதையைத் திருத்துவது தொடர்பாகவும், அதனூடாக யாழ்-கொழும்பு போக்குவரத்தை சீராக்குவது தொடர்பாகவும் சிரத்தை கொண்டு, பேச்சுவார்த்தைகளையும் பெருமுயற்சிகளையும் மேற்கொள்கிறதே தவிர, வன்னிக்குள்ளே மல்லாவிக்கும் புதுக்குடியிருப்புக்கும், முல்லைத்தீவுக்கும் கிளிநொச்சிக்கும் என வன்னிக்கு அவசியமான உள்ளூர் போக்குவரத்துப்பற்றி அது அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி,100 நாட்கள் கடந்து உடன்படிக்கையின் பல்வேறு விடயங்கள் நிறைவேற்றப்பட்டும் படாமலும் இருக்கின்ற நிலமையிலும், வன்னியில் இன்னமும் மல்லாவிக்கும் புதுக்குடியிருப்புக்குமான போக்குவரத்து துணுக்காய் நட்டாங் கண்டல் காடுகள் ஊடாக மூக்கைச்சுற்றியே தொட்டுக்கொண்டிருக்கின்றது.

பல நூறு மைல்களுக்கு அப்பால் இருந்தான குடாநாட்டுக்கான பயணம் தற்போது சிலமணிநேரங்களுக்குள் சுருக்கப்பட்டுள்ள நிலமையிலும், வன்னிக்குள்ளேயே சிலமைல்கள் தூரங்களுக்கிடையேயான பயணம் இன்னமும் நாட்கணக்காக நீள்கின்ற ஒன்றாகவே இருந்துவருகிறது.

ஆக, கடந்த 7-8 வருடங்களாக ஈழப்போரட்டத்தின் வெற்றிக்காகவும், தாயக மீட்புச் சமர்களில் படைக்கப்பட்ட சாதனைகளுக்காகவும் எத்தனையோ விலைகளைக்கொடுத்து, இன்றைய சமாதான நிலை தோன்றவும் காரணமாகஇருந்த வன்னிமக்களின் அவல வாழ்வில் இந்த உடன்படிக்கையோ, சமாதான முயற்சிகளோ பெரியளவில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்றே கூறவேண்டும்.

தகவல் யுகத்தின் ஒரு கற்கால பிரதேசம் போல இருந்துகொண்டு அந்த யுகத்தின் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்த வன்னி மண்ணும், அதன் மக்களும் இன்னமும் முன்னர் இருந்தது போலவே தனிமைப்படுத்தப்பட்டு, துண்டுத் தீவுகளாக, மீண்டும் ஒரு சமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான முயற்சிகள் — நிரந்தரத் தீர்வா? காலங்கடத்தலா?

ஸ்ரீலங்கா அரசாங்கம் - தமிழீழ விடுதலைப்புலிகள் கடந்த நான்கு மாதங்களாக பாரிய மீறல்கள் ஏதுமின்றி கடைப்பிடித்து வரும் புரிந்துணர்வு ஒப்பந்தம், நீண்டகாலமாக போரினால் துயரங்களை அனுபவித்த தமிழ் மக்களுக்கு ஆறுதலையளித்தாலும் இன்னமும் நம்பிக்கையை ஏற்படுத்த வில்லை.முறியுமா? அல்லது அதிலுள்ள கால அட்டவணைக் கடமைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருதரப்பினரும் பேச்சு வார்த்தை மேசைக்கு, வருவார்களா? வந்தாலும் சிறந்த தீர்வுக்கான களமாக தாய்லாந்து பேச்சுவார்த்தை அமையுமா, என்ற வினாக்கள் தவிர்க்க முடியாதபடி எழுந்துள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை புரிந்துணர்வு ஒப்பநதப்படி பாடசாலைகள், வணக்கத்தலங்களி லிருந்து படையினர் விலக வேண்டும். நகரங்கள் பட்டினங்களிலுள்ள சோதனைச்சாவடி, வீதித்தடைகள் அகற்றப்பட வேண்டும். புலிகள் மீதான தடைகள் எந்தவித நிபந்தனைகளுமின்றி நீக்கப்படவேண்டும் அதன் பின் தாய்லாந்தில் இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பாக முதலில் பேச வேண்டும். என்பதில் விடாப்பிடியாக நிற் கிறார்கள்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைத் தீர்வுக் கான மூலப் பிரச்சினைகளில் தீர்வு காண் பதற்காக விட்டுக்கொடுப்பதில் படைத் தரப்பு மனோநில காரணமாக புரிந்து ணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் வணக்கத் தலங்கள் பாடசாலை களிலிருந்து படைமுகாம்களை முற்றாக அகற்ற தயங்குவது போல தெரிகிறது. அதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நிபந்தனையின்றி நீக்கு வதன் மூலம் புலிகளுக்கு மறைமுக அங்கீகாரத்தை வழங்கும் நிலை ஏற்ப டும். இது தடைசெய்துள்ள சர்வதேச நாடுகள் மீளாய்வு செய்யவும் தடை செய்ய ஏனைய நாடுகள் தயங்கும் நிலையை ஏற்படுத்துவது மட்டுமல்ல, ஜனாதிபதி சந்திரிக்கா முதல் ஜே.வி.பி உள்ளிட்ட பேரினவாதிகள் பௌத்த அமைப்புக்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக பிரசாரம் செய்யும் நிலையை உருவாக்கலாமென ரணில் விக்கிரமசிங்க நம்புகிறார். அத்தோடு இடைக்கால நிர்வாக சபையை வழங்குவது நாட்டை பிரித்து கொடுப்பதாக சித்தரிக்கப்படலா மென்றும் ஐக்கிய தேசியக்கட்சி அரசு தயங்குவது போல தெரிகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருதரப்பினரையும் கையொப்பமிடச் செய் வதற்கு பகிரதப் பிரயத்தனமெடுத்த நோர்வே அரசு தற்போது இருதரப்பி னரையும் சமாதான மேசைக்கு கொண்டு வருவதில் தீவிர எத்தனங்களை மேற்கொண்டு வருகிறது.

தாய்லாந்து சமாதான மேசையில் முதலில் எதைப்பேசுவது என்பது குறித்தும் இருதரப்பும் முரண்பட்டு நிற்கின்றன. தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்கனவே ஒப்புக் கொண்டபடி இடைக்கால நிர்வாக சபைய பற்றி முதலில் பேசுவோம் என்கிறது ஐக்கிய தேசிய முன்னணி அரசு சந்திரிக்கா பாணியில் கால அட்ட வணைப்படி இனப்பிரச்சினை அடிப்படை பற்றி பேசவேண்டுமென்கிறது.

தமிழர் தரப்பை பொறுத்தவரை தமிழ் மொழி புறக்கணிப்பு, கல்வியில், வேலை வாய்ப்பில் சமவாய்ப்புக் கோரி ஆரம்பித்தாலும் பின்னர் தமிழ் தாயகம், தமிழ் தேசியஇனம் சுயநிர்ணய அடிப்படைகளில் வியாபித்துள்ள அதே வேளை தமிழீழ விடுதலைப்புலிகள் 'தமிழ்' ஈழம் கோரி போராடி வருகின்றார்கள்.

ஆனால் ஸ்ரீலங்கா அரசு இனப் பிரச்சினை தீர்வுக்கான அடிப்படைகளை ஏற்றுக்கொள்ளாது ஒற்றையாட்சியின் கீழ் ஓரளவு அதிகாரப் பகிர்வை வழங்கியே தீர்வை வழங்க முற்பட்டு வருகிறது.

தமிழர் தரப்பு திம்பு முதல் இன்றுவரை சமாதான நடைமுறைகளின் கீழ் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வாய்பளித்தே வந்துள்ளது.1985 யூலை மாதம் நடைபெற்ற திம்பு பேச்சு வார்த்தையின் போது தமிழர் தாயகம், தமிழ் தேசியம் சுயநிர்ணய உரிமை என்ப வற்றை அடிப்படையாகக் கொண்டு பேச்சு வார்த்தை நடாத்த தமிழர் விடுதலைக் கூட்டணி முதல் இன்றுவரை போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட தமிழர் தரப்பு ஒருமித்து முன் வந்தன. ஆனால் திம்பு கோட்பாடு இலங்கையின் இறைமை ஒருமைப்பாடு என்பவற்றிற்கு ஊறுவிளைவிப்பவை என்று கூறி நிராகரிக்கப்பட்டன.

இனவிடுதலைப் போராட்டம் முளை விட்ட நாளிலிருந்து ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் தமிழர் தாயக கோட்பாட்டை சிதறடிக்கும் வகையில் திட்மிட்ட குடி யேற்றங்களை வடக்கு கிழக்கில் மேற் கொண்டதுடன் தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் பிரிவினைக்கு வழிவகுக்குமென கூற நிராகரித்து வந்துள்ளனர். இன்றைய பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தாயகக் கோட்பாட்டை நிராகரிப்பதாக தெரி வித்திருக்கின்ற நிலையிலேயே சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்து வருகின்றன.

தாய்லாந்து பேச்சு வார்த்தையில் முதலில் இனப்பிரச்சினை அடிப்படைகள் பற்றி பேச வேண்டுமென ஆட்சியாளர்கள் தற்போது முன்வந்திருப்பது பேச்சுவார்தையை விரைவில் முறிப்பதற் கான ஒரு தந்திரோபாயமா என்று எண்ணவைக்கிறது.

**-ஜி.நடேசன்-**

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் இன்னமும் தமிழீழ கோரிக்கையைக் கைவிட்டதாக அறி விக்கவில்லை. ஆனால் திம்பு கோட்பாட்டின் அடிப்படையில் தமிழர்களின் அபிலாசைகளை தீர்க்கக்கூடிய தீர்வை முன்வைத்து அதனை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டால் தமிழீழக் கோரிக்கை யை மீளாய்வு செய்ய தயாரென்று தேசியத்தலைவர் வே.வேலுப்பிள்ளை பிரபாகரன் வன்னியில் நடாத்திய செய்தியா ளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

எனவே இனப்பிரச்சினை நிகழ் வுக்கான அடிப்படைகளிலிருந்து பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கவேண்டுமென்று கோரும் சிங்கள ஆட்சியாளர்கள் சமாதான சூழலைநீடிக்க செய்வதாயின் புரிந்தணர்வு ஒப்பந்த விடயங்களை அமுல்படுத்தல், நிபந்தனையின்றி புலிகள் மீதான தடையை நீக்குதல் தாய்லாந்தில் முதலில் இடைக்காலநிர்வாக சபையைப்பற்றி பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்.

பின்னர் திம்பு கோட்பாடு தொடர் பாக சிங்களத் தரப்பினர் நிலைப்பாட்டை அரசியற் கட்சிகள் பொது அமைப்புக்க ளுடன் கலந்துரையாடி இனப்பிரச்சினை நிகழ்வு தொடர்பான தனது தரப்பு அடிப்படையை முன்வைக்க வேண்டும்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சலுகைகளுக்கானதல்ல. ஜீவாதார உரிமைகளுக்கானது. பல்வேறு உயிர்த்தியாகங்கள், இழப்புக்கள், அர்ப்ப ணிப்புக்களுக்கு மத்தியில் கடந்த கால் ஆண்டுகாலமாக ஆயுத போராட்டமாக தீவிரம் பெற்றுள்ளது. இதனை வெறுங்கையால் முழம் போட்டு தீர்க்க முடியாதென்பதை சிங்களத் தரப்பினர் உணர வேண்டும்.

சமாதான வழிமுறைகளில் கீழ்அரசியல் தீர்வு காண்பதற்காக கிடைத்த இறுதிவாய்ப்பு தவறவிடப்படுமே யானால் இந்த நாடு சுடுகாடாவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது. தாயகக் கோட்பாடு, சுய நிர்ணய உரிமை என்பன இந்த நாட்டின் இறை மையைச் சிதறடிக்குமென அச்சம் தெரி விக்கும் ஸ்ரீலங்கா அரசு எரிகிற வீட்டில் கொள்ளிபிடுங்கும் பாணியில் ஏகாதி பத்திய சக்திகளுக்கு இந்த நாட்டை தாரை வார்த்து வருகிறது.

எனவே, தாய்லாந்து பேச்சு வார்த்தைக்கு முன்பாகவும், தாய்லாந்து பேச்சுவார்த்தையின் போதும் விட்டுக் கொடுப்புக்களைச் செய்யவேண்டிய கடப்பாடு ஸ்ரீலங்கா அரசுக்கே உண்டு. ஆட்சியாளர்கள் என்ற பொறுப்போடு, சகல இனங்களையும், அரவணைத்தாக செயற்படவேண்டும். சிங்கள ஆட்சியா ளர்களாக சிங்கள நலன்களையும், பேரினவாதிகளின் எண்ணங்களுக்கும் மதிப்பளித்து செயற்படுமானால், சமாதான நடவடிக்கைகள் பின்தள்ளப் படலாம்.

இனப்பிரச்சினைக்குச் சமாதான நடைமுறைகளின் கீழ் அரசியற் தீர்வு காண்பதற்கான வாய்ப்பு இப்போது ஸ்ரீலங்கா அரசிடம் அதுவும் நோர்வே பிரசன்னத்துடன் வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தக்கவாறு பயன்படுத்தவேண்டு மென்பதே சமாதானத்தை விரும்பும் மக்களது பேரவா? சாதாரண சிங்கள மக்கள் உள்ளூராட்சித் தேர்தலின் போதும் இதனைத் தெளிவாக உணர்த்தி யுள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படை அம்சங்களில் விடாக் கண்ட னாக எதிர்க்கட்சிகளும், கொடாக்கண்ட னாக, ஆட்சியாளரும், இருப்பதுதான் சமாதான நடைமுறைகளின் கீழ் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முக்கிய தடையாகும்.

# கொல்லுவது நாங்கள் புதைப்பது நீங்கள்

ஐம்பதாண்டுகால சுதந்திர(?) வர லாற்றில் ஸ்ரீலங்கா தேசம் உலகம் முழுவதிலும் பெயர் பெற்றது. அதன் படுகொலைக் கலாசாரத்திலேயாகும்.

முன்னர் ஜே.வீ.பீ.யின் கிளர்ச்சிக்காலத்தில் தென்னிலங்கை யிலும்,பின்பு ஈழ விடுதலைப்போராட் டம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து வடக்குக் கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்திலும், ஸ்ரீலங்காப் படைகள் செய்து குவித்த படுகொலைகள் கின்னஸ்சில் பதிவாக வேண்டியவை.

இந்த ஸ்ரீலங்கா அரசபடைக ளின் படுகொலைகளில் உள்ள சிறப் பம்சம் என்னவென்றால், அவர்கள் சும்மா மனிதர்களைச் சுட்டோ வெட்டியோ கொன்றுவிடுவதில்லை. அதற்குமப்பால், கொல்லப்பட்டவர் களை டயர்கள் போட்டு எரிப்பது, அல்லது சடலங்களைத் தூக்கி ஆற்றுக்குள் வீசுவது, அப்படி யுமில்லையென்றால் கொல்லப்பட்ட வர்களைப் பூமிக்கடியில் போட்டுப் புதைப்பது என கொல்லப்பட்டவர் களின் உறவினர்களுக்கு மரணச் செலவுகள் இல்லாதவாறு அவர்கள் பார்த்துக்கொள்வர்.

தென்னிலங்கையில் ஆயிரக் கணக்கான அப்பாவி இளைஞர்களை, ஜே.வி.பி. சந்தேகநபர்கள் என கைது செய்து அவர்களைக் கொன்று ஆறுக ளுக்குள் வீசியெறிந்தனர்.

கிழக்கு மாகாணத்தில், 90களில் நூற்றுக்கணக்கான அப்பாவி இளைஞர்களைக் கொன்று வீதிகளில் டயர்கள் போட்டு ஈமக்கிரியைகளை முடித்துவைத்தனர்.

யாழ் குடாநாட்டில்தான் அவர்களுக்கு ஆறோ குளமோ கிடைக்கவில்லை. நீண்டகாலம் ஸ்ரீலங் கா அரசு விதித்த பொருளாதாரத் தடைகளால் அங்கே டயர்களுக்கும் தட்டுப்பாடு.

(பழைய டயர்களையும் அங்கே மக்கள் பாவித்துவிடுவார்களே)

எனவேதான் அங்கு அவர்கள் தாம் கொன்றுகுவித்த இளைஞர்களை செம்மணியில் போட்டுப் புதைத்தார் கள்.

ஆனால் இப்படியெல்லாம் படையினர் பொதுமக்களுக்கு மரணச் செலவில்லாமல், சமயங்களில் மரணச் செய்தியே வெளியே தெரியாமல் பல இளைஞர்களை முடித்துக்கட்டிய போதும், சமயங்களில் நிலத்துக் கடியிலிருந்து பூதம் கிளம்புவது போல அவர்களது கைங்கரியங்கள் வெளியுலகுக்குத் தெரியவந்துவிடு வதுண்டு. இதற்காக நன்றிகெட்டு எமது ஜனங்கள் அவர்களைத் திட்டித்தீர்ப்பதுண்டு.

எனவேதான் இப்போ அவர் கள் அந்த ஈமக்கிரியை வேலைக ளையெல்லாம் கைவிட்டுவிட்டனர். ''கொல்வது நாங்கள்,எரிப்பதோ புதைப்பதோ நீங்கள்'' என புதிய முறையை அறிமுகப்படுத்தியிருக் கிறார்கள்.

ஆக தமது செயற்பாடுகளில் இப்போ ஸ்ரீலங்காப் படையினர் நாகரீகமடையத் தொடங்கியுள்ளார் கள்.

இதைப்போய் நாம் தவறாகப் புரிந்துகொள்ளலாமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இரண்டு தசாப்தங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா அரச படைகளுக்கும் இடையில் ஏற்பட்ட கொடிய யுத்தம் எத்தனையோ



# "அம்மா வேணும்... அப்பா வேணும்..."

**க.ஜெகதீஸ்வரன்**

உயிர்களையும், கோடிக்கணக்கான சொத்துக்களையும், உடைமைகளையும் தின்று ஏப்பம் விட்டுள்ளது.

அந்த யுத்தத்தின் பக்கவிளைவுகளால் பல இளம் குடும்பப் பெண்கள் கணவன்மாரை இழந்து விதவைகளாகவும் எத்தனையோ பேர் வயது, பால் வேறுபாடின்றி அங்கவீனர்களாக முச்சக்கர வண்டிகளுடனும், பேனா பிடித்து 'அம்மா' எழுதவேண்டிய பிஞ்சுக் கைகள் பல பிச்சைப்பாத்திரங்களுடன் பஸ்தரிப்பு நிலையங்களிலும், தெருக்களிலும், சந்தைகளிலும் அன்றாட ஜீவனத்தை நடாத்த இன்னுமொரு ஜீவமரணப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் யுத்தம் சம்பந்தப்பட்ட இருதரப்பில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை விட சாதாரண சிறார்களும், இளம் பிள்ளைகளும் இக் கொடிய யுத்தத்தால் சொல்லொண்ணாத் துன்ப, துயரங்களை அனுபவிப்பது தமிழர் போராட்டத்தில் மறக்கப்படாமல் மனங் கொள்ளப்பட வேண்டும்.

யுத்தத்தின் கோரத் தாண்டவத்தால் தாய், தந்தை இருவரையுமே இழந்த சோகக் கதைகளைக் கேட்டும் பார்த்தும் அறிகின்ற போது நம் கண்கள் நம்மை அறியாமலே கண்ணீர் வடிக்கின்றன.

கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா அரச படைகள் கொக்கட்டிச்சோலைப் பகுதியில் புலிகளை அழிக்கிறோம் எனக் கூறிக் கொண்டு கண்மூடித் தனமான தாக்குதல்களை மேற்கொண்டதும் அதனால் பல குடும்பப் பெண்கள் கணவன்மாரை இழந்து விதவையான சம்பவங்களும் கறைபடிந்த அத்தியாயங்களாகும். மட்டக்களப்பு மக்கள் அவ்வளவு இலகுவாக மறந்து விட முடியாத வகையில் மறையாத வடுக்களை இவை ஏற்படுத்தியுள்ளது மறுக்க முடியாதது.

இவ்வாறு தாய் தந்தையை இழந்து அனாதரவான பிள்ளைகளுக்கு தாயைப் போல் அன்பையும், ஆதரவையும் காட்டி அவர்களை அரவணைத்து வருகிறது கொக்கட்டிச் சோலையில் அமைந்துள்ள 'கதிரொளி' இல்லம்.

கடந்த 05.05.2001ல் ஆரம்பிக்கப்பட்ட கதிரொளி இல்லம் தற்போது 22 ஆண், பெண் சிறார்களுக்கு அடைக்கலம் கொடுத்து கண்ணை இமை காப்பது போல காத்துவருகிறது. தாய் ஒருத்தி தன் பிள்ளைகளுக்கு பாரபட்சம் இல்லாமல் எவ்வளவு பாசமாகப் பணியாற்றுவாளோ, அந்தப் பணியைத் திறம்பட செய்து வருகிறது.

இவ் இல்லத்திலுள்ள அனைத்துப் பிள்ளைகளுமே எட்டு வயதுக்கும் பன்னிரெண்டு வயதுக்கும் இடைப்பட்டவர்கள், இவர்கள் அனைவரும் தற்போது பாடசாலைக்கு சென்றுவருபவர்கள். அவர்களுக்கு தாய் தந்தையின் ஞாபகம் வராதளவிற்கு இல்லத்தை நடாத்துபவர்களால் அன்பும், ஆதரவும் ஊட்டப்படுவதும் காட்டப்படுவதும் சுட்டிக் காட்டத்தக்கது.

கதிரொளி இல்லத்தின் பொருளாளரும், பொறுப்பாளருமான அரசரெட்ணம் தயானந்த ரவியைச் சந்தித்த போது கதிரொளி இல்லம் பற்றி மனம் திறந்து, உணர்வுபூர்வமாக அவர் கூறிய கருத்துக்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

கதிரொளி இல்லத்திலுள்ள பல இளம் பிள்ளைகளுக்கு தந்தை இல்லை. எமது சமூகத்தைப் பொறுத்தவரையில் ஆண்களை குடும்பத்தலைவனாக கொண்டு கட்டமைக்கப்பட்ட இயல்பு வாழ்க்கையில் குறித்த ஆண் இறந்து போனால் அல்லது காணாமல் போனால் பிள்ளைகளைக் கட்டிக்காக்க வேண்டிய பாரிய சுமை பெண்ணின் மீதே விழுகிறது.

அச்சுமையை கடைசிவரை தாங்கிக் கொள்ளும் பலம பலருக்கு இருப்பதில்லை.

இவ்வாறானவர்களின் பல பிள்ளைகளை தம்மால் முடிந்தவரை ஒன்றிணைத்து அகில இலங்கை இந்து மாமன்றம், அரசடித்தீவு எம்.பி.சிஎஸ். பொதுமக்கள், சில போடிமாரின் உதவியுடன் இவ இல்லத்தை இயங்கச் செய்வதாக சொல்கிறார் தயானந்தரவி.

ஒரு பிள்ளையினுடைய உணவுக்கு மட்டும் மாதாந்தம் குறைந்தது 1500 ரூபாவுக்கு மேல் தேவைப் படுகிறது. அதைவிட இங்குள்ள 22 பிள்ளைகளுமே பாடசாலை செல்பவர்கள். இவர்களுடைய அடிப்படைத் தேவைகளை எம்மால் நிறைவு செய்ய முடிந்தாலும் பல சிரமங்களுக்கு மத்தியிலேயே இப் பணியை ஆற்றி வருகிறோம். இப்பணியில் கதிரொளி இல்லத்தின் செயலாளர் சிந்தாத்துரை புஸ்பலிங்கத்தின் பணி அளப்பரியது என்கிறார் தயானந்தா ரவி

எமது இல்லத்திற்கு அரசிடமிருந்தோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தோ எவ்விதமான உதவிகளும் கிடைக்கவில்லை. எமது இல்லம் நிரந்தரமான கட்டிட வசதி எதுவும் இல்லாமல் தற்காலிக கொட்டில் ஒன்றிலேயே இயங்கிவருகிறது. இது போன்ற விடயங்களை அவர் கவலையுடன் சுட்டிக் காட்டுகிறார்.

நிரந்தரக் கட்டிடம் அமைப்பதற்கான உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் தாய் தந்தையை இழந்த பல பிள்ளைகள் கொக்கட்டிச் சோலையில் உள்ளனர். அவர்களையும் இணைக்க ஆர்வம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இங்குள்ள பிள்ளைகளுக்கு அன்பு விசயத்தில் தாம் எவ்வித குறைகளையும் வைப்பதில்லை என்ற போது அவ் இல்லத்தில் நடந்த சம்பவமொன்றை இவ்வாறு சுட்டிக்காட்டுகின்றார். ஒரு நாள் இரவு இல்லத்தில் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார். எங்கும் மயான அமைதி இரவு 11 மணியளவில் இல்லத்திலுள்ள அ.விஸ்ணுபிள்ளை (அம்மா,அப்பா இருவரும் இல்லை)என்று சிறுவன் எழுந்திருந்து அழுது கொண்டிருந் தானாம். பொறுப்பாளர் ரவியும் எழுந்து கொண்டு தம்பி என்ன செய்யுது என்ன வேணும் எனக் கேட்க சிறுவன் தொடர்ந்து அழுது கொண்டே இருந்தானாம். அயலவர்கள் சிலர் வந்து தம்பி ஏன் அழுகிறாய் என்ன வேணும் எனக் கேட்க அவன் ''அம்மா வேணும் அப்பா வேணும்'' எனச் சொல்லி சொல்லி அழுதானாம். எதுவும் செய்யமுடியாமல் எங்களுக்கும் அம்மா, அப்பா இல்லை தானே என ஆறுதல் சொல்லியதைச் சொல்லும் போதே கண்கலங்கினார் தயானந்தரவி.

அச்சிறுவன் தற்போது துடிப்பும் நல்ல படிப்புமாக வளர்ந்துவருவதையும் சுட்டிக்காட்டி எல்லா முக்கியமான விழாக்



களையும் தான் அவர்களுடன் சேர்ந்தே கொண்டாடுவதாகவும் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் நமது சமூகத்தில் எந்தக்குறையுமே இல்லாத பிரஜைகளாக இவர்களை ஆக்கும் வகையிலேயே இவர்களுக்கான கல்வியும் ஏனைய பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது.

நகர்ப்பகுதியிலுள்ள பிள்ளைகளுக்கு உதவிபுரிய பல நிறுவனங்கள் உண்டு.ஆனால் கொக்கட்டிச் சோலையில் கதிரொளி இல்லம் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலும் சிறப்பாக இயங்கி வருகிறது.

கதிரொளி இல்லத்தையும் பிள்ளைகளையும் பாதுகாக்கும், கல்வியூட்டும் பாரிய பொறுப்பு மிக்க பணியை ஆசிரியை ஞானேஸ்வரியும் அவருக்கு உதவியாக கமலேஸ்வரியும் புரிகின்றனர். இவர்களும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கொக்கட்டிச்சோலை இராம கிருஷ்ண மிஷன் பாடசாலை அதிபர் ஷபேஸ்வரனும் அப்பாடசாலை ஆசிரியர்களும் சிலரும் இம்மாணவர்களுக்கு கல்வி, மற்றும் ஏனைய உதவிகளைப் புரிந்து வருவதையும் சுட்டிக்காட்டினார் தயானந்தரவி.

## கருவேப்பிலையாகும் கள்ளிச் செடி

*காலம் பிடித்து உதைத்துத்தள்ளிய*
*கரைந்தோடிய நேற்றைய தினங்களை*
*ஒரு முறை திரும்பிப் பார்க்கையில்*
*எந்தவொரு மனிதன் மீதோ விலங்கின் மீதோ*
*எரிச்சலோ குமைச்சலோ கிடையாது*

*அன்றி அவர்களின்*
*கடும் கண்டனம் எறிவாங்கி*
*காட்டு மிராண்டிகள்போல் வாழ்க்கையை*
*வதத்து விட்டேன் என்பதையுணர்கையில்*
*நானே என்னை நொந்து கொள்கிறேன்.*

*மறையும் இந்த மாலைவரை*
*மனிதம் பற்றியோ நேசிப்புக்கள் பற்றியோ*
*மறந்து போயும் கூட சிந்திக்கவே இல்லை.*
*அன்றி கலவரங்களை முடுக்கிக் கொண்டும்*
*ஆயுதங்களின் மேல் உறங்கிக் கொண்டும் கிடந்து*
*விட்டேன்.*

*இது எனக்கு வாழ்க்கையின் தவழல்*
*உதறியெடுத்த புதியதோர் நிலை*
*உளம் மகிழ வாழப்போகிறேன்*
*ஒரு தூதனைப் போல் அல்லாவிடினும்*
*ஒரு மனிதனைப் போலாவது*

**நகுமான்.ஏ.ஜமீல்,**
**மருதமுனை**



## யுத்தத்தின் முடிவுரைகள்!

மீளவும் உயிர்ப்பித்த
என் கிராமத்தில்
என் சுவடுகள் பதிகின்றன।

எனை அரவணைத்த
அந்த கிராமம்
எனக்காய்
மறுஜென்மம் எடுத்திருந்தது।

ஆறு வயதில்
'அ' சொல்லிய பள்ளி
இடிந்திருந்தது
கிட்டிப் புள் விளையாடிய
என் வீதிகளில்
பல பள்ளங்கள்.

என் சிறு வீடு
காணாமல் போயிருந்தது
யுத்தத்தின் முடிவுரையை
அந்த கிராமம்
வாசித்தது என்னிடம்।

முற்றத்து பனை
முற்றாக இல்லை
தென்னைகளோ
தெருவில் கி'..ந்தது

என் கிராமத்தை
தேடி வந்த வேளை
தேங்கி நின்ற கண்ணீரே
பதில் சொல்லியது என்னிடம்।

ஆம் உயிர்களை குடித்து
ஊர்களை உருக்குலைத்த
அந்த யுத்தத்தின் முடிவுரையை
என் கிராமம்
வாசித்துக் கொண்டிருந்தது.

கலைமகள் கிருஷ்ணமூர்த்தி,
நாவற்குடா, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

களத்திலேயே வீழ்வோம் என்ற பெயரில் பல பிறமொழிக் கவிதைகளின் மொழிபெயர்ப்பு குழல் வெளியீட்டகத்தால் நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது. (நவம். 2001) 'குழல்' என்கின்ற புனைப்பெயருடைய **வி.பி.ஜோசப் அல்லது அருளாளன்** என்கின்ற நூலாசிரியர் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த கவிதைகளையும் இதில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளார். ஒரு அருமையான படைப்பாக வெளிவந்துள்ள இந்நூலுக்கு இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் வழங்கிய முன்னுரையின் ஒரு பகுதி இங்கே எமது வாசகர்களுக்காகத் தரப்படுகிறது.

-ஆ -ர் -

# -உணர்வுத் தளத்தில் ஒன்றுபடும் விடுதலைப் போராட்டக் கவிதைகள்-

**மொ**ழி பெயர்ப்பு என்பது யாரும் செய்துவிட்டுப் போகக்கூடியது அல்ல. ஒரு படைப்பாளியாக யாவரும் பாவனை பண்ண முடியும். ஆனால் மொழி பெயர்ப்பாளனாக பாவனை பண்ணமுடியாது.

இரத்தமும் சதையுமாக உண்மை இருக்கும் போது வேறொரு காட்சியை வரைந்துகாட்ட முடியாது.

எனவே ஓர் அகராதியை வைத்துக் கொண்டு யாரும் மொழிபெயர்ப்புச் செய்ய முடியாது. மூலக்கவிஞன் எந்த உணர்திறனில் எத்தகைய உள்ளக்கிளர்ச்சியுடன், எந்த பண்பாட்டுத்தளத்தில், வாழ்வியல் சூழலில் தன் படைப்பினை வெளிப்படுத்தினானோ, அதனை, அந்த உணர் திறனில் மொழிபெயர்ப்பாளன் கொண்டு வரவேண்டும். இது ஒரு இலகுவான காரியமல்ல விடியவிடிய விழித்திருந்து படித்துச் சித்தியடையும் பரீட்சை போன்றதும் அல்ல.

பொதுவாக கவிதையானது விடுதலைக்கான குரலாக வலிமை பெற்றுள்ளது. அது மண்விடுதலையாக இருந்தால் என்ன, பெண் விடுதலையாக இருந்தால் என்ன, சகல கட்டுக்களையும் கட்டுடைக்கும் மொழி ஊடகமாக கவிதை வீச்சுக் கொண்டுள்ளது.

உலகத்தில் இதுவரை நடந்த சகல சமூகப் பண்பாட்டுப் புரட்சிகளும் விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங்களும் உலகப்போர்களும்,நாடுகளின் தேசிய இன விடுதலைப் போராட்டங்களும் உலகத்து கவிதையின் பரிணாம வளர்ச்சியை புத்துருவாக்கி உள்ளன.

சமூக அரசியல், பண்பாட்டு தத்துவப் பின்னணிகளில் கவிதை பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. அதன் வெளிப்பாடே உலகத்து மொழிகளில் கவிதை கொண்டுவந்தபோது மாற்றம் ஆகும். குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் அவ்வவ் மொழிகளில் கொண்டிருந்த மரபுசார்ந்த அடிப்படைகளை இக்கவிதைகள் கேள்விக்குட்படுத்தி கட்டுடைத்துள்ளன.

அந்த உடைப்பின் பயனாகவே இன்று சகல நாடுகளின் எல்லைகளை இலகுவாகக் கடந்து கொண்டு கவிதை என்பது ஒரு பொது மொழியாகி சகல இன மக்களுக்கும் பொருந்தக்கூடிய. சகல இன மக்களுக்கும் அளவெடுத்து தைத்த ஆடையாக வரிவடிவம் பெற்றுள்ளது.

உலகத்தின் எந்த கோடியிலும் அடக்கப்படுகின்ற எந்த இன மக்களது அகக்குரலும் ஒரே தன்மையாக இந்தக் கவிதைகள் வெளிப்படுத்துவதை கவிதைகளைச் சுவைக்கும் அனைவரும் உணருவர்.

விடுதலைக் குரலாக கவிதை உள்ளபடியால் தான் . விடுதலைப் போராட்ட உணர்வுமிக்க கவிஞரின் கவிதைகள் உணர்வுத் தளத்தில் ஒன்றுபடுகின்றன. ஒவ்வொரு இனத்திற்கும் நாட்டுக்கும் எத்தகைய வேறுபாடு இருந்தாலும் அவை எதிர்கொண்ட கொள்கின்ற அடக்குமுறைகளும் அதனை எதிர்கொள்ள அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளும் பொதுமைப்பாடானவை.

இத்தகைய மேன்மைமிக்க காரணத்தினாலேயே அந்தந்த நாட்டு விடுதலை வேள்வியில் குதித்த குதித்துவருகின்ற கவிஞர்களின் விடுதலைக்குரலும் ஒரேசுருதியில் ஒலிக்கின்றன.

**''முன்னூறு ஆண்டுகள் கழிந்தனவாயினும்**
**நிறந்தான் மாறியது,**
**மொழிதான் மாறியது**
**நாங்கள் இன்னும்**
**அடக்கு முறையின் கீழ்''**

என்று கவிஞர் அ.யேசுராசா சொன்னது தனியே ஈழத் தமிழனுக்கு மட்டும் பொருந்துவது அல்ல. ஆங்கிலேய, பிரெஞ்சு, போத்துக்கேய, டச்சு காலனித்துவங்களின் கீழ் விழி பிதுங்கிய சகல நாட்டு மக்களுக்குந்தான்.

**''பிதாவே அந்த யூதர்கள் அறியாமல் செய்தார்கள்**
**இந்த யூதர்களும் அறியாமல் செய்கிறார்கள்**
**இவர்களது இம்சையும் கொடுமையும்**
**எங்களுக்கு விடுதலையைத் தரும் என்பதை**
**அறியாமல் செய்கிறார்கள் ஆமென்!''**

என்று கண்முகம் சிவலிங்கம் என்னும் எங்கள் ஈழகத கவிஞர் சொல்வதும் எல்லோருக்கும் பொருந்தக் கூடியதே

**''அந்த இருட்டில் இருந்து**
**எழுந்து நடக்கும் போது**
**சாம்பல் கலந்த புழுதியில்**
**முன்னைவிட அழுத்தமாய் பதியும்**
**என் பூட்ஸ் அடையாளம்''**

இவ்வாறு கவிதை பாடினார் எமது மண்ணின் கவிஞர் வினோதினி.

அதனால்தான் வியட்நாம் கவிஞர்கள்




பலஸ்தீன கவிஞர்கள் குர்திஷ் கவிஞர்கள் என்றும் எந்தநாட்டு விடுதலைக் கவிஞர்களும் எங்களோடு ஒன்றிணைந்து போகின்றார்கள். அவர்களின் அக உணர்வுகள் அச்சொட்டாக எம்மோடு பொருந்துகின்றன. எங்களை நாங்களே கண்ணாடியில் பார்ப்பது போல உள்ளக்கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

பலஸ்தீனக் கவிஞர் மஹ்மூட்ஹார்வீஸ் அவர்களின் கவி வரிகள் பின்வருமாறு அமைகின்றன.

**''நீஎன்னைச் சுற்றிக் கட்டலாம்**
**வாசிப்பதற்கும் புகைப்பதற்கும்**
**நீ தடை விதிக்கலாம்**
**எனது வாயில் நீ**
**மண் இட்டு நிரப்பலாம்**
**ஆயினும் என்ன**
**கவிதை என்**
**துடிக்கும் இதயத்தின் குருதி.**
**என் றொட்டியின் உப்பு**
**கண்ணின் திரவம்**
**நகங்களால் கண் இமைகளால்**
**கத்தி முனையால்**
**அதனை நான் எழுதுவேன்.''**

மஹ்மூட்ஹார்வீஷ் அவர்களின் உணர்வுகளுக்கும் எங்கள் கவிஞர் கப்டன் வானதியின் உணர்வுகளுக்கும் ஏது வித்தியாசம்?

வானதி பின்வருமாறு தன் குமுறலை வெளிப்படுத்துகின்றார்.

**''எழுதுங்களேன்**
**நான்**
**எழுதாது செல்லும்**
**என் கவிதையை**
**எழுதுங்களேன்**
**ஏராளம்**
**ஏராளம். எண்ணங்களை**
**எழுத**
**எழுந்துவர முடியவில்லை**
**எல்லையில்**
**என் துப்பாக்கி**
**எழுந்து நிற்பதால்**
**எழுந்து வர என்னால் முடியவில்லை**
**எனவே**
**எழுதாத என் கவிதையை**
**எழுதுங்களேன்.''**

இந்தத் தொகுப்பிலுள்ள கவிதைகளின் அனேகமானவை எங்கள் மனங்களை எங்கள் கோபங்களை வெளிப்படுத்துகின்றன. பலவேறு நாடுகளைச் சேர்ந்த பல்வேறு கவிஞர்கள் கவி புனைந்தாலும் அவர்கள் எங்கள் வளவுக் கோடியில் எங்கள் வயல்களில் எங்கள் போராட்டக் களங்களில் எங்கள் மாவீரர் துயிலும் இல்லங்களில் இருந்து குரல் கொடுப்பதைப் போல் இல்லையா?

தொகுப்பின் முதலாவது கவிதையே பின்வருமாறு அமைகிறது.

**''நாங்கள் செல்வதற்கான நேரம் வந்தது**
**தூரத்தே எதிரியின் வேட்டுக்கள்**
**மெதுவாய் அவனை இறக்கி வைத்தோம்.**
**அஞ்சலிவரியும் பொறிக்கவில்லை.**
**நினைவுக் கல் கூட நாட்டவில்லை**
**அவன் மகிமையில் அவனைத் தனியே விட்டு**
**அமைதியாய் எழுந்து நடந்தோம்.''**

இரண்டாவது கவிதையில் வரும் பின்வரும் வரிகள் எமது போராளிகள் சொல்லும் வரிகள் தானே .

**''எனவே**
**நீதியே**
**உனக்கோர் கடப்பாடுண்டு**
**எதற்காய் அவர்**
**உயிர் கொடுத்தாரோ**
**அந்த லட்சியம்**
**தோற்கவே கூடாது''**

**கவிதைத் தொகுப்பு இப்படித்தான் முடிகிறது.**

**''எங்களை நோக்கி**
**போர் வந்து விட்டது**
**எங்களின் குடிகளினுள்ளே**
**அது வந்தாயிற்று**
**மனிதரின் புதல்வர்கள்**
**அதை எதிர் கொண்டாக வேண்டும்**
**வெள்ளையர் பீரங்கிகள் முழங்கட்டும்**
**அதன் புகை மண்டலம்**
**எங்களைச் சூழ்ந்து கொள்ளட்டும்**
**சாகும் வரை**
**அவர்களுடன் போரிடுவோம்**
**களத்திலேயே வீழ்வோம்**
**வேறு இடங்களில்**
**எங்களுக்கு**
**சாவு வர வேண்டாம்''**

மண்ணின் மீதும் மண் விடுதலை மீதும் ஆழமான நேசிப்புக் கொண்ட ஒரு விடுதலைப் போராளியிடமிருந்துதான் இவ்வாறான கீர்த்தி மிகு வரிகள் வர முடியும்.

வியட்நாமின் நேசிப்புள்ள கவிஞன் ஹோசிமின்

**''எனது**
**கரங்களும் கால்களும் கட்டப்பட்டுள்ளன**
**குன்றுகளில்**
**பறவைகள்பாடிக்கொண்டிருக்கின்றன**
**மலர்கள் மணம் வீசிக் கொண்டிருக்கின்றன**
**பறவைகளின் இனிய பாடலை**
**கேட்டும்**
**மலர்களின் நறுமணத்தை**
**நுகர்ந்தும்**
**மகிழ்வதை யாரால் தடுக்க இயலும்''**

என்று கேட்பதைப் பொலவே எங்கள் கவிஞன் சு.வில்வரத்தினம்

**''வரண்டமண்ணில் வாழ்வை விளைத்தோம்**
**வாய்க்கால் ஓரப் புல்லுக்கும்**
**வாழும் முறைமை காத்தோம்**
**வியர்வை சொறிந்த உழைப்பில்**
**விளைச்சல் முன்றலில் அனைவர்க்கும்**
**காலம் வண்டிமாட்டின் சதங்கைகளால்**
**கல கல வெனக் குலுங்க நடந்த அது ஒரு காலம்''**

என்று சொல்வதில் என்ன பாகுபாடு உள்ளது.

``களத்திலேயே வீழ்வோம்'' என்னும் இத்தொகுப்பின் அடிச் சரடு இத்தகைய பின்னணியிலேயே முக்கியத்துவம் பெறுகிறது.

விடுதலைப் போராட்டம் நடத்திய நடத்திக் கொண்டிருக்கும் பலவேறு இனங்களின் விடுதலை உணர்வு பொதுவானது என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி தேவை இல்லை.

மொழி வேறுபட்டாலும் உணர்வுரீதியாக ஒன்றுபட்டுள்ளோம். இந்த உணர்வினைப் புரிந்து கொள்ள இது போன்ற மொழி பெயர்ப்புக்கள் மேலும் மேலும் வளர வேண்டும்.

'குழல்' அவர்களும் அவர் போன்ற மொழி பெயர்ப்பில் காதல் கொண்டவர்களும் இந்த முயற்சியில் ஈடுபடுவார்கள்

இவ்வறே எம்மண்ணின் படைப்புக்களும் ஏனைய மொழிகளில், குறிப்பாக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். இது இன்றைய காலகட்டத்தின் தேவையும் கூட.

**நன்றி:- குழல் களத்திலே வீழ்வோம்**

*கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் கவிகள் தொடர்ச்சி அடுத்த வாரம் இடம்பெறும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA



# மன்னிப்பும் மாற்றமும்



மருதமுனை
ஏ.எம்.எம்.பாறூக்

"நெசவுத் தொழில் இல்லாமல் போய் இரண்டு வருசமாயிற்று. வேறு தொழில் செய்து குடும்பத்தைக் காப்பாற்ற போதிய வருவாய் இல்லை. இப்படி எத்தனை நாளாக இருக்கலாம். சாப்பாட்டுக்கு, உடு புடவைக்கு, வைத்தியச் செலவுக்கென்று எவ்வளவு உழைச்சாலும் போதாது. இப்படி இருந்துக்கிட்டே இருந்தா எப்படி இந்தக் குமர ஒப்பேத்தி விடுதலையாகிறது" என்று குடும்ப நிலைபற்றி மனைவியோடு பேசிக்கொண்டிருந்தான் சபீர்.

"திருமணம் செய்து இருபது வருசமாப் போய்விட்டதே என்று சொல்லி மனைவியோடு எதை எதையோ பேச ஆரம்பித்தான்.

இவ்வளவு வருசம் போன பின்னும் பிள்ளை என்று ஒரே ஒரு மகள் தான். எத்தனையோ பரிசாரியிடம் சென்றும் அடுத்த பிள்ளைக்கு பலன் இல்லை.

"சேனைக்குடியிருப்புக்குள் இருக்கிற ஐயர் கூட கடைசியில் கையை விரிச்சுப் போட்டார். இனி மேலும் அவரைத் தொடர வழி வைக்கவில்லை. பணம்தான் கரைஞ்சு போனது!

டாக்டர்களிடம் போய் ஏதாவது ஆலோசனை கேட்டால் என்ன என்று மனைவியிடம் கேட்ட போதே எரிந்து விழுந்து வாய்க்கு வந்தபடி பேசிப் போட்டாள். இன்னும் இன்னும் ஏதாவது பேசினால் அடி தான் விழும் என்று ஆசையை அடக்கிக் கொண்டு அன்பாகப் பேச எண்ணினான். மனைவியும் விரும்பி பேசினாள்.

"ஹசீனா எனக்கு ஒரு எண்ணம் உதயமாகிறது. நீங்க எப்பிடியாவது ஒத்துக்க வேணும். உங்களுக்கு இன்னும் வயசு போகவில்லை. விரும்பினா ஏற்பாடு செய்கிறன். விரும்பாவிட்டா ஒரே வார்த்தையில ஏலாது என்று சொல்லிப் போடுங்க" என்றான் சபீர்.

வயசு வந்த பெண் பிள்ளைக்கு காலா காலத்தில திருமணம் செய்து விட்டால் நல்லது என்று தாய் எண்ணினாள். கணவன் எதை எதையோ சொல்லிக் கொண்டிருந்தான். இருந்தும் அவளை ஒரு முறையாவது வெளிநாட்டுக்கு அனுப்பி எடுத்துவிட்டால் ஓரளவு சமாளித்துப் போடலாம் என்று நினைத்தான். ஊரில இருந்த தொழில் நெசவு. அது மட்டும் இருந்தபோதெல்லாம் உழைத்து எப்படியோ பல வேலைகள் முடிச்சிப் போட்டான். இனி எதையுமே நம்பினால் காலங்கடந்து போய்விடும் என்று சொல்லித்தான் மனைவியை வெளிநாட்டுக்கு அனுப்பும் முடிவுக்கு வந்தான். மனைவி இன்னும் பதில் கொடுக்கவில்லை.

"வாப்பா வெளிநாட்டுக்கு உம்மாவை அனுப்பாதீங்க நான் போய் உழைச்சிட்டு வாறன்" மகளுடைய வார்த்தை அவனுடைய மனதைச் சுட்டது.

"மகள் ஒங்க வாப்பா காலாகாலத்தில பணம் சம்பாதித்தா இப்படி நீ கேட்கமாட்டாய். என்ன செய்யலாம். உண்டதலை எழுத்து. போய் வேலையைப் பாருபுள்ள. எல்லாம் சரியா வரும்" என்று ஆறுதல் சொன்னாள் தாய்.

தன்னுடைய வலது பக்கத்தில் இருந்த வெற்றிலைத் தட்டத்தை எடுத்து தானும் மென்று மனைவிக்கும் கொடுத்தான். வெற்றிலை மென்றதால் கொவ்வைப் பழம் போல அவளுடைய உதடு நிறம் ஏறி இருந்தது. இந்த தருணம் பார்த்து வெளிநாட்டு விடயத்தைப் பேச நினைத்தான். அவனுடைய பேச்சைக் கேட்டு சிரித்து விட்டாள். கணவனுக்கும் ஒரு படி சந்தோசம் கூடியது. "வெளிநாட்டுக்கு போன பெண்கள் எல்லாம் நல்லா உழைச்சிக்கிட்டுத்தான் வாறாங்க. நீங்க மட்டும் போய் சும்மா வந்துவிட்டா எல்லாம் பிழையாகிப் போய் விடும்" என்றான். கணவனுடைய அனுமதி கிடைச்சது அவளுக்கு விருப்பத்தை உண்டாக்கியது. "ஆம்பிள வீட்டிலிருக்க பொம்பள வெளிநாட்டுக்குப் போய் உழைக்கிற காலமாப் போச்சே" என்று பெருமூச்சு விட்டாள்.

"மகள் உன்ர கழுத்தில ஒரு சங்கிலி வாங்கிப் போட்டுப் பார்க்க ஏலாமத்தான் உங்க வாப்பா இவ்வளவு காலமும் இருக்கார். பயப்படாதே. வெளிநாட்டுக்காவது போய் முதல் சம்பளத்தில் உனக்கு ஒரு சங்கிலி வாங்கிப் போட்டாத்தான் என்ர மனசு நிம்மதியடையும்" என்று தாய் கூறினாள்.

எத்தனையோ ஆண்கள் பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு காரணம் இருக்கிறது. அக்கம் பக்கத்து வீட்டுக்காரன் ஆடம்பரமாக வாழும்போது மற்றவனால் பொறுத்துக் கொள்ள இயலாது. இப்படி உலகம் போய்க் கொண்டிருந்தா எல்லாப் பெண்களும் வெளிநாட்டுக்கு போக வேண்டும். இல்லாவிட்டால் பாவம் பார்க்காமல் கண்டபடியெல்லாம் பணம் தேட வேண்டும். இது நியதியாக மாறி விட்டது. ஹசீனா எப்படியோ கஷ்டப்பட்டு வெளிநாட்டுக்குப் போய்விட்டாள்.

தாய் வெளிநாட்டுக்குச் சென்றதிலிருந்து தகப்பனின் போக்கில் மாற்றம் ஏற்படுவதை நாளுக்கு நாள் அவதானித்துக் கொண்டே வந்தாள் மகள். மனம் திறந்து கேட்டுவிட்டால் எதை எதையோ சொல்லி கதையால் மழுப்பி விடுவான். மகளுக்குத் தெரியாமல் செய்த வேலை அம்பலமாகிவிட்டால் ஊரே முகத்தில் துப்பிவிடும் என்று நினைத்து சில நாட்களில் விட்டுவிடுவான்.

அன்று மாலை ஐந்து முப்பது மணியளவில் தகப்பனைப் பற்றிக் கேட்ட விடயம் அவளுடைய உள்ளத்தைத் தாக்கியது. வீட்டில வயசு வந்த பெண்பிள்ளையை வைத்துவிட்டு, மனைவியை வெளிநாட்டுக்கு அனுப்பி, அவள் அனுப்பி வைக்கின்ற பணத்தை குடிச்சு வெறிக்கிற செய்தியை அறிந்து தாரைதாரையாக அழுதாள். துன்பங்கள் துயரங்கள் இப்படியும் இருக்கிறதே என்று வருந்தினாள்.

தகப்பன் குடிப்பதை நிறுத்திவிடாது போனால், தான் சொந்த வீட்டை விட்டு வெளியேறி எங்கேயாவது போய்விட்டால் ஊரும் உலகமும் கேவலமாகப் பேசிவிடும் என்கின்ற காரணத்துக்காகவும், மானம் மரியாதைக்காகவும் இன்னும் வாழ வேண்டும் என்று நினைத்தே வீட்டில் இருந்து வருகிறாள்.

"வாப்பா உங்களுடைய செயலால் எத்தனை மாப்பிள்ளைகள் வந்து விருப்பம் இல்லையென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். இப்ப நீங்க ஒரு முடிவுக்கு வராது போஷனால் நான் ஒரு முடிவுக்கு வந்து விடுவன்" என்று ஆக்ரோசமாகச் சொன்னாள்.

மகள் சொல்வதில் உண்மை இருக்கிறது என்பதை மனதார ஒத்துக்கொண்டான். இன்னும் இன்னும் இப்படிப்பட்ட செயலைச் செய்தால் சமூகத்தில் மனிதனாக வாழ முடியாது என்று தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டான்.

தகப்பனுடைய கேவலமான வேலையைப் பற்றி வெளிநாட்டில் உள்ள தாய்க்கு எப்படியாவது அறிவித்து விட்டாக வேண்டும் என்ற எண்ணம் மகளை வாட்டியது. இப்படிப்பட்ட தகப்பன்மார்கள் எத்தனையோ பேர் தானும் கெட்டு, தன் குடும்பம், பிள்ளை குட்டிகள் எல்லாவற்றுக்கும் கேவலமான பேரை வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள். திடகாத்திரமாக இருக்கும் போதே உடல் வருத்தி உழைத்து சாப்பிடுவதை விரும்பாமல் யார் யாரையோ நம்பி கெட்டுப் போய் விடுவதெல்லாம் எவ்வகையிலும் ஒரு ஆண்மகனுக்குப் பொருந்தாது.

"உம்மா நீங்க உழைச்சது போதும் இனிமேல் ஒரு நிமிசம் கூட வெளிநாட்டில் நிற்க வேண்டாம். யாருக்காக நீங்க வெளிநாட்டுக்குப் போனீங்களோ அந்த மகளே சொல்லிக் கொள்கிறேன். நீங்க உடனடியாக வரவேண்டும். பதில் போட்டுக்கொண்டு காலத்தைக் கடத்த வேண்டாம்" என்று எழுதப்பட்டிருந்த வார்த்தையை படித்ததும் அவசர அவசரமாகப் பயணத்தை மேற்கொண்டாள் ஹசீனா.

மகளை எப்படியாவது ஒரு நல்ல இடத்தில் கைபிடித்துக் கொடுத்து தானும் அந்த நிழலில் வாழும் மட்டும் இருக்கலாம் என்று அவள் எண்ணி இருந்தாள். அந்த நினைப்பில் தகப்பன் மண் அள்ளி வெச்சுப் போட்டாரோ என்றெல்லாம் எண்ணினாள். கணவனைப் பற்றி அவள் அறியாமல் இல்லை. ஆனால் அப்படி என்னதான் நடந்திருக்கும் என்றெல்லாம் மனசுக்குள் எண்ணி சொந்த நாட்டுக்கே வந்து இறங்கி விட்டவள் வீடு நோக்கி முச்சக்கர வண்டியொன்றில் விரைந்தாள்.

மது போதை தெளியாமல் விறாந்தையில் படுத்துக்கிடந்த கணவன் சபீரைக் கண்ட ஹசீனாவுக்கு அழுகையும் ஆத்திரமும் பொத்துக் கொண்டு வந்தது.

மகள் "உம்மா" எனச் சந்தோஷத்தில் கூக்குரலிட்டுக் கொண்டு தனது தாயாரை ஓடி வந்து கட்டிப்பிடித்தாள்.

மகளை அணைத்து முத்தமிட்ட ஹசீனா கணவனைப் பார்த்துப் புலம்பத் தொடங்கினாள்.

"ஐயோ இப்படி குடிகாரராயிட்டாரே. இந்த மனிஷன். இருந்த நிலத்தை வித்து, கடனப்பட்டு வெளிநாட்டுக்குப் போய் அங்க நான் மாடா உழச்சு அனுப்ப, இப்படி இந்த மனுஷன் சீரழிஞ்சு திரிந்திருக்கிறாரே"

மனைவியின் குரல் கேட்டு சபீர் கண் விழித்தான். அவனுக்குப் போதை தெளிந்திருந்தது.

"ஹசீனா... ஹசீனா... எப்ப வந்தீங்க" என அவன் கேட்க,

"நீங்க பேசாதீங்க...;; என ஹசீனா கோபத்துடன் கணவனை அடக்கினாள்.

"இத்தனை காலமா நான் அனுப்பின பணமெல்லாத்தையும் இப்படி அநியாயமா குடி குடி எண்டு செலவழிச்சுப் போட்டீங்களே. உங்களுக்கு வெட்கமாயில்ல மனைவி சம்பாத்தியத்தில வாழுறதுக்கு. நான் வேர்வை சிந்தி உழைத்த பணத்தையெல்லாம் நாசமாக்கிப் போட்டீங்களே" என ஹசீனா மீண்டும் புலம்ப,

சபீர் இடைமறித்தான். "ஹசீனா, என்னை மன்னிச்சிடுங்க... என்ன மன்னிச்சிடுங்க.. நான் இனி குடிக்க மாட்டன். ஏதோ கேடுகெட்டவங்க சொல்லக் கேட்டு குடிச்சிட்டன். இனி நான் உங்களையும், மகளையும் உழைச்சுப் காப்பத்துவன். நீங்க இனி வெளிநாட்டுக்குப் போகக் கூடாது" என அவனும் தழுதழுத்த குரலில் சொன்னான்.

ஹசீனா மௌனமாக் கணவனைப் பார்த்தாள். மகளும் தன் தகப்பனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சபீரின் தெளிந்த முகமும் தெளிவான பேச்சும் அவன் திருந்திவிட்டான் என்பதை இருவருக்கும் புரிய வைத்தது.

தகப்பனின் மனமாற்றத்தால் சீர்குலைந்து போகவிருந்த குடும்பம் உயிர் பெற்றுவிட்டது. வெளிநாட்டுக்குச் சென்று வீடு திரும்பிய மனைவியிடம் சிறு பிள்ளை அழுவது போல் தான் செய்த அவன் பிழைகளையெல்லாம் சொல்லி அழும்போது நீண்டகாலம் அவனோடு வாழ்ந்து இரண்டறக் கலந்த உள்ளம் கலங்கியது. அந்தக் கலக்கத்தில் தெளிவு பெற்ற உள்ளங்கள் மீண்டும் உயிர் பெற்றது. மகளும் அந்த மன்னிப்பும் மாற்றமும் ஏனையோருக்கும் ஒரு பாடமாக அமைந்துவிட்டதை எண்ணி சந்தோசம் அடைந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# ஞாயிறு சாரல்

-பகீ-



# இன்று வீட்டில் மீன் குழம்பா?



**மீன் குழம்பு நிறையப் பேருக்குப் பிடித்தது. ஆனால் எல்லோராலும் சுவையாகத் தயாரிக்க முடிவதில்லை. மீனை வாங்கி, சுவையாக மீன் குழம்பு வைப்பதற்கு இங்கே டிப்ஸ்:**

◆ நாள்பட்ட மீனை வாங்கினால் குழம்பு ருசியாக இருக்காது. மீனை வாங்கும் முன்னால் அதன் செப்பட்டைப் பகுதியை திறந்து பாருங்கள். நீலம் கலந்த சிவப்பு நிறமாக அதன் உள் பகுதி காட்சியளித்தால் அது நாள்பட்ட மீன். அதனை வாங்க வேண்டாம்.

◆ முழு மீனாக அப்படியே வைத்து விடக்கூடாது. மீனின் குடலை எடுத்து சுத்தப்படுத்தி மஞ்சள் பொடி, உப்பு கலந்து தடவி வையுங்கள். ஆற்று மீன், கயல் மீனில் சேற்று வாடை வீசும். அதனை வெட்டுவதற்கு முன்னால் அரைமணி நேரம் உப்பு நீரில் அமுக்கி வையுங்கள்.

◆ டின்னில் அடைத்து வரவழைக்கப்படும் இறால் மீனை மென்மையாக்கி விட்டு, சமைக்க வேண்டும். சமையல் செய்வதற்கு அரைமணி நேரத்துக்கு முன்னர் சிறிது நேரம் சிறிதளவு வினிகர் சேர்ந்த தண்ணீரில் முக்கி வையுங்கள்.

◆ மீனை வேக வைக்கும்போது சிறிதளவு வினிகர் சேர்ந்தால், மீன் உடைந்து போகாது.

◆ கருவாட்டில் அதிகம் உப்பு இருந்தால், அதைப்போக்க கழுவும் தண்ணீரில் சிறிதளவு பேப்பரை கிழித்துப் போடுங்கள்.

# இது பெற்றோர்களுக்கு..



சமயக் கொண்டாட்டங்கள், இல்லக் கொண்டாட்டங்கள், உறவினர் வீட்டு விசேட தினங்களை உங்கள் குழந்தைகளுடன் சேர்ந்து கொண்டாடுங்கள். அப்பொழுதுதான் உங்களுக்கும் குழந்தைகளுக்குமிடையே இறுக்கான உறவும் அன்புப் பிணைப்பும் உண்டாகும்.

குழந்தைகள் வழிதவறாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு வழி.

திருமதி. தட்சணாமூர்த்தி, திருமலை வீதி, மட்டக்களப்பு.

# பொன் மொழிகள்

1. எந்தச் செயலைச் செய்கிறோமோ,. அந்தச் செயலைப் பற்றிய உணர்வு இருக்க வேண்டும்.

*- ஹென்றி போர்ட் -*

2. உள்ளத்திலும், சொல்லிலும், செயலிலும் சத்தியம் நிலைத்துள்ளவனை எவராலும் வெல்ல முடியாது.

*-காந்தியடிகள்-*

3. விதி வலியது தான் ஆனால் மாற்ற முடியாதது அல்ல.

*- சுவாமிஇராமகிருஷ்ணானந்தன்-*

4. நான் மகிழ்ச்சியோடு இருக்கிறேன்; ஏனெனில் நான் யாரிடமும் எதையும் எதிர் பார்த்ததில்லை.

*- அறிஞர் ஐன்ஸ்டைன்-*

5. அழகான கருத்துக்கள் அனைத்தும், ஒரு நல்ல செயலுக்கு ஈடாகாது.

*- ராஜாஜி-*

*சி.ரேவதி, மட்/வின்சட் மகளிர் தேசிய பாடசாலை.*

| மதிக்க வேண்டியவை | மிதிக்க வேண்டியவை |
|---|---|
| இறைவனை | கனவுகளை |
| தாயை | பொய்களை |
| தந்தையை | தீயவைகளை |
| குருவை | விபசாரத்தை |
| உண்மையை | சூதாட்டங்களை |
| அறிவை | கொலைக்காரர்களை |
| பெரியோரை | சூனியக்காரர்களை |
| நல்லவைகளை | ஒழுக்கமில்லாதவர்களை |

ஏ.ரி.எம்.றியால்.

# சாப்பிடும்போது ஏன் தண்ணீர் குடிக்கக்கூடாது?



சாப்பிடும்போது இடையிடையே தண்ணீர் குடித்தால் இரப்பை நிரம்பிவிடும். இதனால் உன் உடம்புக்குத் தேவையான சாப்பாட்டைச் சாப்பிட முடியாமல் போய்விடும். இது சத்துக்குறைவுக்கு வழிவகுக்கும் அதே சமயம் சாப்பிட்டு முடித்ததும் நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும்.

# பல் போனால்...



பற்களுக்கும், எலும்புகளுக்கும் சம்பந்தம் உண்டா? உண்டு என்கிறார்கள் டப்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 'மனித உணவு' ஆராய்ச்சி நிபுணர்கள்.

பற்கள் விழுவது, முதுகெழும்பு, மணிக்கட்டு மற்றும் தொப்புள் பகுதியிலுள்ள எலும்புகள் தேய்ந்து வருவதைக் குறிக்கிறது என்கிறார்கள்.

## கடந்த மே — 31 உலக புகைத்தல் தவிர்ப்பு தினமல்லவா?

# மீண்டும் ஒரு ஞாபகமூட்டல் கவிதை



*நண்பா...*
*சுகம் பெற*
*தீ மூட்டுகிறாய்...*
*ஆனால்,*
*சிகரட்*
*உன் வாழ்க்கையை*
*கொழுத்துவதை*
*ஏன் எண்ணிப்*
*பார்க்க மாட்டாய்?*

*வட்டம் வட்டமாக*
*நீ விடும்*
*புகைச் சுருள்*
*உன் வாழ்க்கையை*
*ஒரு வட்டத்துக்குள்*
*அடக்குவதை*
*ஏன் அறிய*
*மறுக்கிறாய்!*

*சிகரட் தலையில்*
*நீ தீவைக்கும்*
*போது*

*சிகரட்*
*சொல்லுமாம்*
*என் தலையில்*
*தீவைப்பவனுக்கு*
*நான் தீவைப்பேன்*
*என—*
*நீயே*
*உன் தலையில்*
*தீவைக்கலாமா?*
*வரும் காலங்களை*
*தீக் கிரையாக்கலாமா?*

*சிகரட்டில்*
*எரியும்*
*சிவப்பு நெருப்பில்*
*எரியப் போவது*
*நீ மட்டுமல்ல*
*உன் எதிர் காலமும்தான்*
*என்பதைப்*
*புரிந்து கொள்!*

வ. அருள் தாசன்,
நாவற்குடா.

# உங்களுடன் சில நிமிடங்கள் 16

# மனசே நலமா...?



அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்கின்ற பழமொழியினை அடிக்கடி நாம் பயன்படுத்துவதுண்டு.

மனசு நலமா.. என நாம் யாரையும் கேட்பதில்லை. ஆனாலும் சிலரது முகத்தை வைத்தே அவர்கள் மன நிலையை நாம் கண்டு கொள்கிறோம். 'என்ன மனசு நல்லாயில்லையா.....' எனக் கேட்கின்றோம்.

உடலை நலமாக வைத்திருப்பது எப்படி என எமக்குத் தெரியும். மனதை நலமாக வைத்திருப்பது எப்படி என எம்மில் பலருக்குத் தெரியாது.

மனதும் உடம்பும் நெருக்கமானது. உடல் நலமானால் மனதும் நலம் பெறும். மனது நலம் பெற்றிருந்தால் அது உடல் ஆரோக்கியத்தில் பங்களிப்பைக் காட்டும்.

நம் பலம் என்ன? பலயீனம் என்ன? எனத் தெரிந்து செயற்பட்டாலே மனது நலம் பெறத் தொடங்கிவிடும்.

நமது பலயீனம் என்ன என்பது எமக்கு தெரிந்திருக்க வேண்டியது! அவைகளை நீக்கிக்கொள்ளவேண்டும்.

எமது பலம் என்னவோ, அதை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நாம் செய்கின்ற தொழில் எதுவானாலும் அதில் முழுத் திருப்தியுடனும் ஈடுபாட்டுடனும் செயலாற்ற வேண்டும். அது தொடர்பான திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

எட்டாக் கனிகளை எட்டிப் பிடிக்க விரும்பி எம்மை நாமே வருத்திக் கொள்ளக் கூடாது. எது விடயமானாலும் மன நிறைவும் திருப்தியும் கொள்ள பழகிக் கொள்ள வேண்டும்.

அளவுக்கு மீறிய ஆசைகளை வளர்த்துக் கொள்வதை முடிந்தவரை தவிர்த்துக் கொள்ளல் நலம்.

உங்களுக்குத் தெரியும். சாக்கடை நீரில் அசுத்தங்களைத் தவிர வேறெதற்கும் இடமில்லை. பசுமையும் அழகும் நிறைந்த ஒரு மலர் வனத்தில் மனிதர்கள் மட்டுமல்ல. வண்டுகள் ..... பறவைகள் .... என மனதுக்கு இதம் தரும் எல்லாம் இருக்கும்.

எம் மனதும் அப்படியானதுதான். கெட்ட எண்ணங்களுக்கும் ஆசைகளுக்கும் அடைக்கலமளித்தால் அந்த மனது சாக்கடைக்குச் சமன்.

நல்லெண்ணத்துடன் அமைதியாய் இருக்கின்ற மனது மலர்வனம் போன்றது.

எம் மனங்களை மலர்வனமாய் வைத்திருப்பதும் சாக்கடையாய் ஆக்கிக் கொள்வதும் எமது பழக்கங்களிலும் எண்ணங்களிலும் தான் தங்கியுள்ளது.

'அதனாற் தான் என்னவோ..? எண்ணம் போல் வாழ்வு எனச் சொல்கின்றனர் போலும்.

எம் மன நலத்திற்கு நல்ல நண்பர்களின் சினேகமும் தேவை. நம்மை உண்மையாய் நேசிக்கும் நண்பர்கள் இருந்தால் இயல்பாகவே எம் மனச் சுமை குறைந்து விடும்.

**அடுத்தவாரம் மற்றொரு விடயத்துடன்... 'நிமிடங்கள்' உங்கள் இல்லம் வரும்.**

செய்யித் ஸர்மிளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தினக்கதிர் சினிமா**

# உள்ளே உலவும் மிருகங்கள்

## ஓ – போட்ட ஜெமினியும், அவதாரமெடுத்த 'தமிழ்' உம் எல்லாமே வன்முறைகள் நிறைந்தவைதான்.





முழுநீள அடிதடிகளையே முழுப படத்தின் சாரமாகக் கொண்டு வெற்றிக்கனி பறிக்கிற வழுக்கத்தை யார் ஆரம்பித்தது என்று தெரியவில்லை.

தமிழ் சினிமா, இன்று மறுபடியும் இரத்தத்தில் குளிக்கத் தொடங்கியிருக்கிறது.

கடந்த சில மாதங்களில் வெற்றியடைந்த படங்களின் பட்டியலைப் பார்த்தால் மக்களும் இரத்தச் சகதியில் தோய்ந்த படங்களைத் தான் இரசிப்பவர்களோ என்றே எண்ணத் தோன்றுகிறது. ஒரு சில ரெளடிக் கதைகள் தோல்வியடைந்தாலும், 'நந்தா' வுக்குக் கிடைத்த பரவலான வரவேற்பு 'தயா' வுக்கும் 'ஜெமினி'க்கும் வசூல் ரீதியாகக் கிடைத்த வெற்றி 'தமிழு'க்குக் கிடைத்த அருமையான பாராட்டு அனைத்துமே மக்களும் இந்த பாணியை மறைமுகமாக ஆதரிக்கிறார்களோ எண்கிற எண்ணத்தை, அச்சத்தை ஏற்படுத்துகிறது.

மெலோ டிராமாவாக இருந்தாலும் காதல் படங்களையும் குடும்ப சென்ட்டிமென்ட் படங்களையும் ரசித்து வந்த மக்கள் எப்படி 'தாதா ஜுரத்திற்கு' ஆட்பட்டார்கள்?

''அதிலொன்றும் அதிசயமில்லை. மக்களின் அடிமனதில் எப்போதும் படிந்திருக்கும் துளி வன்மத்தைத் தான் சினிமாக்காரர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்'' என்கிறார் உளவியல் பேராசிரியரான ராஜ்மோகன்.



இதே விஷயத்தை இன்னும் தெளிவாக விளக்குகிறார் மனநல மருத்துவரான ருத்ரன்.

''எல்லா மனுஷங்களும் மிருகத்தில் இருந்து பரிணாம வளர்ச்சி அடைஞ்சவங்கதான். உள்ளுக்குள் எல்லோருக்குமே கோபமும், வெறியும். வன்மமும் இருக்கும் ஆனா சமூகமும், பண்பாடும் அவங்க படிக்கிற படிப்பும் அந்தக் குணங்களையெல்லாம் அடக்கி வைச்சிருக்கும். அடக்கப்பட்ட அந்த உணர்வுகளை சினிமாவில் கதாநாயகள் செய்து காட்டும் போது அவங்களுக்கு ஒரு ரிலீ'.ப் கிடைக்குது. அவங்கள் அந்த கதாநாயகனாகவே தங்களை அடையாளப்படுத்துகிறார்கள். தங்களிடம் இல்லாத தைரியம் கதாநாயகர்களிடம் இருக்கு என்று அவன் எதைச் செஞ்சாலும் இரசிக்கின்றார்கள்.''

பொதுவாகக் கலை வடிவங்கள் அனைத்தும் சமூகச் சூழல்களைப் பிரதிபலிப்பதாகவே அமையும் என்று சொல்வார்கள். தற்போதைய சினிமாப் பாணியையும் இன்றைய சமூகச் சூழலின் அடிப்படையிலேயே ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது.

பாசமலர் வந்த போது எல்லா ஆண்களுமே, பாச மிகு அண்ணனாக ஆகிவிட மாட்டோமா என்று ஏங்கினார்கள். அன்றைய காலகட்டத்தில் பாசமும், அன்பும் பின்னிப் பிணைந்த கூட்டுக் குடும்பமே பிரதானம். அதனால் அன்றைய சூழலில் பாசமலர், பாலும் பழமும் போன்ற அன்பை மையமாகக் கொண்ட படங்கள் ஜெயித்தன.

இன்றைய தமிழ்ச் சூழலை சுயநல அரசியலும் பேட்டை தாதாக்களுயும் நிர்ணயிப்பதால், படங்களும் அதையே பிரதிபலிக்கின்றன.

அதனால்தான் சமீபத்திய சினிமாக்களில், ஹீரோக்களை ரெளடிகளாகவோ, தாதாவாகவோ சித்திரித்தால்கூட, அவர்களை நல்லவர்களாகவும் அநியாயம் செய்பவர்களைத் தட்டிக் கேட்பவர்களாகவும் கஷ்டப்படுபவர்களுக்கு உதவுபவர்களாகவும் காண்பிக்கிறார்கள். மக்களுக்கும் இது பிடித்து விடுகிறது.

மக்களின் இந்த மனநிலையை மிகச் சரியாகப் பிரதிபலித்தது, சமீபத்தில் வெளிவந்த 'தமிழ்' படம். ஒரு சாதாரண குடும்பத்து இளைஞனின் வாழ்க்கையில் இரண்டு தாதாக்களால் ஏற்படும் மாற்றங்களும் அதனால் அவனும் ரெளடியாக அவதாரமெடுப்பதும் பின்னர் குடும்பத்தினரின் அன்பால் திருந்துவதும் இதன் மைய விஷயம்.

இரு தாதாக்களுக் கிடையேயான மோதல், அவர்களுள் ஒருவன் காதலியால் திருந்தி வாழ நினைப்பது என்று ஓபோட்ட 'ஜெமினியும்' இதே ரகம்தான்.

வெற்றியடைந்த படங்களிலுள்ள மற்றொரு ஆச்சரியமான உண்மையையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

'நந்தா'வில் ஹீரோ தாதாவின் அடியாளாக இருந்தாலும் எதிர்நிலைபாத்திரம் என்பதால் அவன் தாயின் கையாலேயே இறப்பதாக க்ளைமக்ஸ் அமைந்தது. 'தயா'வில்படு மோசமான ரெளடியாக இருக்கும் ஹீரோ, ஓர் அநாதை இல்லத் தலைவியின் அன்பினால் திருந்துவதாகக்ளைமாக்ஸ். சந்தர்ப்பச் சூழ்நிலையில் ரெளடியாக மாறினாலும் குடும்பத்தினர் பாசத்தால் ஹீரோ திருத்துவதாக 'தமிழ்' முடிவு என எல்லாமுமே ஒரு வகைச் சார்பான முடிவாக அமைந் திருந்தன. ''சொல்லுற வழி நெகட்டிவ்வாக இருந்தாலும் பரவாயில்லை. அநீதியை எதிர்த்துப் பொங்கியெழ வேண்டும். என்ற உணர்வை ஏற்படுத்துவதே நல்ல விஷயம் தான்'' என்கிறார் ருத்ரன்.

ஆனால் அந்த உணர்வு அளவுக்கு மிஞ்சிப் போய்விடுமோ என்றுதான் பயமாக இருக்கின்றது.

சமீபத்தில் இந்தியாவின் தென் மாவட்ட கிராமம் ஒன்றில் கொள்ளையடிக்க வந்தவனை ஊர் மக்களே சேர்ந்து அடித்துக் கொன்றிருக்கிறார்கள். அந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு ''நாலுபேரை இப்படி சாகடிச் சாதான் இவங்க திருந்தவாங்க'' என்று மாநிலமெங்கும் பேசினார்களாம். விபரீதமல்லவா?

மக்கள் ரசிக்கிறார்களே என்பதற்காக, நெகட்டிவ் ஹீரோ சப்ஜெக்ட்டுக்களே வந்து கொண்டிருப்பதும் அவை வெற்றி பெறுவதும் மக்களின் மனதில் குறிப்பாக இளைஞர்களின் மனதில் இவை எத்தகைய எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது யோசிக்க வேண்டிய விஷயம். இன்றைய சூழலில் நம் முன் குவிந்துள்ள எத்தனையோ பிரச்சினைகளுள் இதுவும் மிக முக்கியமானது என்பதில் சந்தேகமில்லை.

நன்றி:- குமுதம



# வருஷமெல்லாம் வசந்தம்

## திரை விமர்சனம்

மாறுபட்ட ஒரு கோணத்தில் முக்கோணக் காதல் கதையைச் சொல்ல மிகவும் முயற்சி செய்துள்ளார் அறிமுக இயக்குனர் ரவிசங்கர்.

ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி என்.எம். நம்பியாரின் பேரன்கள் மனோஜ் கே.பாரதியும் குணாலும்!! எக்கச் சக்கமாக படித்தி ருப்பதால் குணால் மீது அதீத அன்பும் எட்டாவதைக்கூட தாண்டவில்லையென்பதால் மனோஜ் மீது அநியாயத்திற்க்கு வெறுப்பும் காட்டுகிறார் தாத்தா! இவர்களது ஊருக்கு வந்து சேரும் அத்தை மகள் அனிதா (புதுமுகம்) இருவருமே காதல் வயப்படுவதும் காதலிக்காக காதலையே மனோஜ் துறப்பதுமாக பயணப்படுகிறது கதை.

இறுதியில் காதல் மீது தனக்கு மரியாதை வந்தது ஏன் என அனிதா தரும் மிக நீண்ட வியாக்கியானம் கொட்டாவிக்கு வித்திடுகிறது!

அனிதாவிடம் அனுதாபத்தைச் சம்பாதிக்க, தன் காதலி தன்னை [illegible] கொண்டு ரீல் விடும் காட்சிகளிலும், கடைசியில் குணால் மீதான காதலை அனிதா வெளிப்படுத்தும் போது நொறுங்கிவிடுமிடத்திலும் நடிப்பில் பதக்கம் பெறுகிறார். மனோஜ்!

கிட்டத்தட்ட ஹீரோவுக்கு சம அந்தஸ்துள்ள பாத்திரம் தனக்குத் தரப்பட்டதை குணால் உணர்ந்தாகவே தெரியவில்லை! ஏதோ ஜூனியர் ஆர்ட்டிஸ்ட் மாதிரி வந்து போகிறார். இவர் தான் என் காதலர் என்று மனோஜை நோக்கி சங்கவி விரல் நீட்டும் இடம் திடுக்கிட வைத்தாலும். பின்னால் சங்கவியின் பின்னணி விளக்கப்படும் போது புஸ்!

நம்பியாரின் பண்பட்ட குணச்சித்திர நடிப்புக்கும், டி.ராஜேந்தரை அப்படியே கண்முன் நிறுத்தும் மயில்சாமியின் மிமிக்கிரிதிறனுக்கும் ஜே போடுவோம்!

இசை சிற்பி 'நான்ரெடி, நீங்க ரெடியா?' டான்ஸ் ஆட வைக்கிறது! மற்றவை பழமை நெடி! படத்தின் ஆரம்பத்தில் மட்டுமே வசந்தம்!

நன்றி:- ஆனந்த விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பாலைவனப் பாறை

அரபு நாட்டுக்காரர் ஒருவர் பாலைவனத்தின் வழியே நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது மணலில் பாதியளவு பதிந்து கிடந்த ஒரு பாறையைப் பார்த்தார். அந்த பாறையருகே சென்றவர் அதைக் கூர்ந்து கவனித்தார்.

'என்னைத் தலைகீழாக திருப்பினால் நிச்சயம் உனக்கு பலன் உண்டு' என எழுதப்பட்டிருந்தது.

அந்த அரபுக்காரர் இந்தப் பாறைக்கு அடியில் ஏதோ பெரிய அளவில் புதையல் இருக்கிறது. அதனால்தான் இதன் மீது இப்படி எழுதப்பட்டுள்ளது என்று நினைத்தார்.

உடனே அந்தப் பாறையைப் புரட்டும் முயற்சியில் இறங்கினார். சில மணி நேர போராட்டத்திற்குப் பின் பாறையை திருப்பினார். ஆனால் அதனடியில் புதையல் எதுவும் இல்லை. பாறையின் மேற் பகுதியில் எழுதப்பட்டிருந்தது போலவே, சில வாசகங்கள் அந்தப் பாறையின் அடியிலும் காணப்பட்டது. 'மனிதா நினைவில் கொள்! பேராசை பெருநஷ்டம் என்பதை உணர்ந்து கொண்டு விடு. அப்போதுதான் நீ நல்ல மனிதனாக வாழ முடியும்.' என எழுதப்பட்டிருந்ததை வாசித்த அந்த அரபு நாட்டுக் காரருக்கு தன் பேராசையின் நஷ்டம் புரிந்தது.





## பழிகளை நீக்கி பண்போடு வாழ்க

அதிகாரியிடம் எதிர்வாதம் செய்யாதே.
அவலை நினைத்து உரலை இடியாதே.
அழையாத வீட்டுக்குள் நுழையாதே.
அக்கிரமக்காரன் முகத்தில் விழியாதே.
ஊரைச் சொன்னாலும் பெயரைச் சொல்லாதே.
உதவி செய்வதை ஒரு போதும் குறையாதே.
எதனையும் நன்கு அறியாமல் ஏற்காதே
தஞ்சம் என வந்தவனை வஞ்சிக்க நினையாதே.

மு.கிரிசாந்தன்,
தரம் - 13 கலைப்பிரிவு,
இ.கி.மி. மகா வித்தியாலயம்,
கொக்கட்டிச்சோலை.

## விடுகதைகளும் விடைகளும்

1. இங்கிருந்து பார்த்தால் இரும்புக்குண்டு. எடுத்துப் பார்த்தால் இனிய பழம்?
2. காய்ப்பர், பூப்பர், கலகலப்பர், காகமிருக்கக் கொப்பில்லை?
3. எட்டுக்கால் ஊன்றி, இருகால் படமெடுத்து, வட்டக்குடை பிடித்துவா ராராம் வன்னியனார்?
4. கத்திபோல் இலையிருக்கும் கவரிமாப் பூப்பூக்கும்; தின்னப் பழம்பழுக்கும்; தின்னாத காய் காய்க்கும்?
5. நாடென்றும் பாராது; காடென்றும் பராது; நீரென்றும் பராது; நிலமென்றும் பராது;ஓடும் உலாவும் உடம்பில்லை?
6. இளமையிலே கறுத்து இருக்கும்; முதுமையிலே வெளுத்து விடும். வெட்ட வெட்டத் தழைத்து வரும்?



குளோடி பெர்னான்டோ,
தரம்- 6, கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி, கொழும்பு-15.

**விடைகள்**
1. பனம்பழம்
2. நெல்லு
3. நண்டு
4. வேம்பு
5. காற்று
6. தலைமயிர்

## அறிந்து கொள்ளுங்கள்



1. உலகிலேயே அதிகமாக மூங்கில் விளையும் நாடு -வியட்நாம்-
2. கூடைப்பந்தாட்டத்தின் பிறப்பிடம் எது? -அமெரிக்கா-
3.நெருப்புக் கோழிகள் அதிகமாக உள்ள நாடு? -ஆபிரிக்கா-
4. சிகப்புச் சிகரம் என அழைக்கப்படும் கோள்? -செவ்வாய்-
5. ஆகாயத் தொட்டி என அழைக்கப்படும் பறவை ? -காகம்-

மதன்ராஜ்,
தரம் ---9டி,
மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி

## சிறுவர் கைவண்ணம்



அமலா,
ஆண்டு - 5[C],
கிங்ஸ்டன் சர்வதேச
கல்லூரி,
கொழும்பு-15.

## உலகில் பெரியவைகள்

1. உலகில் பெரிய நாடு?
**சோவியத் ஒன்றியம்**
2. உலகில் பெரிய மலை?
**இமய மலை**
3. கோள்களிலேயே மிகப் பெரிய கோள்?
**வியாழன்**
4. உலகிலேயே மிகப் பெரிய தீவு?
**கிறீன்லாந்து**
5. உலகிலே பெரிய கட்டடம்?
**எம்பயர்**
6. உலகிலேயே மிகப் பெரிய சமவெளி?
**ரஷ்யச் சமவெளி**
7. பெரிய எரிமலை?
**குவாலாத்திரி**

உ.குமுதினி,
அருட்பணி சிறுவர் இல்லம்,
132, புதிய கல்முனை வீதி,
நாவற்குடா.

## நல்ல பழக்கங்கள்



அன்புடன் பழகுவோம்
ஆசிரியர் சொற்படி நடப்போம்
இன்சொல் பேசுவோம்
உண்மை உரைப்போம்
உயிர்கள் மீது கருணை காட்டுவோம்.
ஊக்கமுடன் கற்போம்
ஏழைகளுக்கு இரங்குவோம்
ஒற்றுமையாக வாழ்வோம்
சுத்தம் பேணுவோம்
பிறருக்கு உதவி செய்வோம்
பெரியோரை மதிப்போம்
முதியோருக்கு உதவுவோம்
நல்ல பழக்கங்களைக் கடைப்பிடித்து நல்லவர்களாக வளர்வோம்

கு.அனுஷியா, ஆண்டு - 4[C]
கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம்.

## தெரிந்து கொள்ளுங்கள்

◆ நாய்கள் இல்லாத ஊர் சிங்கப்பூர். ஊர் எல்லைக்குள் நாய்களோ பிச்சை எடுப்பவர்களோ இருக்கக் கூடாது என்பது இந்த ஊர் சட்டம். மீறினால் பொலிசார் பிடித்துப் போய் விடுவார்கள்.

◆ மனிதனைப் போல சிரிக்கும் பறவை கூக்கா புர்ரா.

◆ குறைந்த நேரம் மலரும் பூ பார்லி பூ.

◆ அணுகுண்டு வெடித்தாலும் சாகாத ஒரே உயிரினம் கரப்பான் பூச்சி.

எம்.ஏ.சீ.எம் சீபான்,
தரம்-9,
அலிகிலியா வித்தியாலயம்,
மட்டக்களப்பு.

## கண்டு பிடியுங்கள்-55

நாணயங்கள் புழக்கத்தில் உள்ளன. 1, 2, 5, 10, 25, 50, 100 சத நாணயங்கள் பொதுவாகப் புழக்கத்திலுள்ளன. இரு நாணயங்களில் 60 சதங்கள் உள்ளன. அவற்றில் நிச்சயமாக ஒரு நாணயம் 50 சதம் அன்று. இது எப்படி சாத்தியம்?

இதற்கான விடையினை தபாலட்டையில் மாத்திரம் எழுதி உங்கள் பாடசாலை முகவரியுடன் 015.06.2002க்கு முன்பாக அனுப்பி வைப்பதோடு தினக்கதிர் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவும்.

கண்டுபிடியுங்கள் 53 இற்கான சரியான விடை '5 பேர்' என்பதாகும். இவ்விடையினை ஏராளமான தம்பி, தங்கைகள் எழுதி அனுப்பியுள்ளனர். அதில் பரிசுக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்.

**அ.சிந்துஜன், தரம்-4, மட்/உதயபுரம் தமிழ் வித்தியாலயம், கல்லாறு**

**பாராட்டுக்குரியவர்**

1. ச.சகுந்தலா, 61, கதிராமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு.
2. பா.விஷ்ணு, தரம்-9[C], மட்/புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு.
3. ஆ.அ.அஜீல், தரம்-10[A], மட்/அல்ஹிரா வித்தியாலயம், காத்தான்குடி-05.
4. எஸ்.கிறிஸ்நாத், மட்/புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு.
5. எம்.ஐ.எம்.ஜாமில், மட்/அல்ஹிறா வித்தியாலயம், ஊர் வீதி, காத்தான்குடி.
6. கலிஸ்ரா அருளப்பு, மட்/விபுலானந்தா வித்தியாலயம், கல்லடி முகத்துவாரம்.
7. அ.ஷிரோமி லக்ஷாந்தி, மட்/விபுலானந்தா வித்தியாலயம், கல்லடி முகத்துவாரம்.
8. தி.மிரோஷினி, புனித சிசிலியா மகளிர் வித்தியாயலம், மட்டக்களப்பு.

கண்டுபிடியுங்கள்-55
தினக்கதிர் வாரவெளியீடு,
த.பெ.எண்:- 06,
இல:- 155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் கூடினால் என்ன பேசுவர்?

வாசுகி குணரத்தினம்

பெண் விடுதலை. சமத்துவம் பற்றிப் பேசுகின்றபோதும் செயற் படுகின்றபோதும் அங்கு பெண்க ளது ஆய்வுத் தளம் ஆண்களா கவே பெரும்பாலான சந்தர்ப் பங்களில் அமைந்துவிடுகின்றது.

ஆண்களை வைத்துக் கொண்டு தமது இருப்பை ஆரா ய்ந்து பரிசீலிக்க முற்படுகின்ற சந்தர்ப்பங்கள் தவிர்க்க முடி யாதவையாகி விடுகின்றன. இருப்பினும் இதன் மறுபிரதிப லிப்பாக வன்மையான எதிர்ப்புக் கொண்ட ஆண்கள் சமூகம் ஒன்று தோற்றம் பெற்று வரு கின்றமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

பெண்கள் ஆண்களை வைத்து தமது இருப்பைப் பரிசீ லிப்பதைக் கூடியளவு தவிர்த்துக் கொண்டு தாம் தமது இருப்புக் காக எவற்றை மேற்கொண்டுள் ளோம் என்ற சுயபரிசோதனை ஆய்வில் ஈடுபடவேண்டியது அவசியமாகும். ஏனெனில் தமது கருத்துக்களை அதன் செயல் வடிவங்களைச் சுயமாக வெளிப் படுத்துகின்ற ஆற்றலை வளர்த் துக் கொண்டுள்ள இவர்களால் சமூகத்திலும், குடும்பக் கட்ட மைப்பிலும் அரசியலிலும் தொழில் நிறுவனங்களிலும் படிப்படியான மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் எட்ட முடிந்துள்ளது எனலாம்.

சமூகத்தின் சாதாரண அடிமட்டத்தில் வாழ்ந்து வரு கின்ற பெண்களின் மனநிலை யில் சிந்தனையில் மாற்றங்கள் ஏற்படாத வரைக்கும் மேல் நிலையில் நின்று செயற்ப டுகின்ற பெண் உரிமை க்காகக் குரல் கொடுத்து வருகின்ற பெண்ணிலைவாதிகள். நிறுவ னங்களின் செயற்பாடுகளால் எந்த விதமான பயன்களுக்கும் குறிப்பிட்ட நிறுவனம் அல்லது குறிப்பிட்ட பெண்ணியவாதியின் வாழ்நாள் வரைக்குமான தற்காலிக பயன் வழியாகவே இருக்க முடியும்.

பொதுவாகப் பெண் சமூகம். சமூகக் கட்டமைப்பு. கலாசார வடிவமைப்பு. வணிக முறையியல் என்பவற்றால் அடி மைகளாக்கப்பட்டுள்ளார்கள். இந்த அடிமைக் கட்டமைவு களை அவர்கள் சுய சிந்த னைக்கு உட்படுத்துவது குறை வாகும். சமூகக் கட்டமைப்பில் மதம். அரசியல், பண்பாடு என் பன கலக்கப்படுகின்றன. இங்கு தொழில் பார்க்கின்ற பெண்கள். கூடிய கல்வி வாய்ப்பினைப் பெறுகின்ற சந்தர்ப்பங்கள் அமையப் பெற்ற பெண்கள் யாவரும் தம்மைத் தாயாகவும், மனைவியாகவும் மட்டுமே அல்லது ''மகிழ்ச்சியான குடும் பத் தலைவி" என்ற கட்டமை வுக்கு உட்படுத்திப் பார்க்கின்ற நிலைமை இன்றும் காணப் படுகின்றது.

கல்வி கற்கும் சந்தர்ப் பம் வாய்க்கப் பெற்று தொழில் பார்க்கின்ற பெண்கள் தமக்குத் கிடைக்கின்ற ஓய்வு நேரங்களை அல்லது தாம் ஒன்றாகச் சேர் கின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் என்ன விடயங்களைப் பற்றிப் பேசுகின்றவர்கள் என்பதை .இங்கு சிறிது உற்று நோக்கு வோம்.

தொழில் செய்யும் இடங்களில் திருமணம் செய்த பெண்களின் கூட்டு, திருமணம் செய்யாத பெண்களின் கூட்டு என்ற பிரிவு காணப்படுகின்றது. பொதுவாகத் திருமணம் செய்த பெண்கள் அவ்விடம் போவதைத் தவிர்ப்பதும், அவர்கள் தங்களது கணவன்மாரின் அளப்புக்களை அளப்பார்கள் எனப் பகிடி கூறி விலகிச் செல்வதையும் அவதானிக்கலாம்.

மேற்கூறப்பட்ட திரு மணமான பெண்களின் கூட்ட மானது தமது கணவரது குண வியல்புகள் பற்றியும் அவருக்கு என்ன கறி பிடிக்கும். என்ன கறி பிடிககாது எப்படிச் சமைத்தால் பிடிக்கும் என்பது பற்றியும் கண வரது உடை களைக் கழுவுதல் பற்றியும் கணவன் எங்கெல்லாம் தன்னை அழைத்துச் செல்கி றான் என்பது பற்றியும் கதைப்பர் இதன் நடுவே தமது குழந்தை குட்டிகள் பற்றிய அறிமுகங்களும் அவர்களது குணவியல்புகளையும் கூறுவர். மேலும் தங்களுடன் தொழில் பார்க்கும் சக பெண்க ளுக்குள்ளே இதுவரைதாலி அணியாத பெண்கள் பட்டியலை யும் முன் வைப்பர். அத்துடன்



இதுவரையும் திருமணம் செய்யாமல் இருக்கும் பெண்கள் பற்றியும் அவர்களுக்கு திருமணம் பேசப்படுகின்றதா லையா என்பதும் பற்றியும் அவர் களுக்கு காதலர்கள் இருக்கின் றார்களா என்பது பற்றியும் கதைப்பர். பின்பு ஒரு சந்தர்ப் பத்தில் அவர்களைப் பார்த்து காதலனின் பெயரைக் கூறிப் பகிடி பண்ணுவர்.

இதற்கு மாறாகத் திரும ணவயதில் நிற்கும் பெண்கள் தமது திருமணம். காதலன். சீத னம் என்பவற்றையும் நகை சேர்ப் பது. பணம் சேர்ப்பது பற்றியும் கதைப்பதுடன் திருமணம் செய்த பெண்களின் கணவன்மாரின் குணவியல்புகள். நடத்தைகள் பற்றியும் ஆராய்வார்கள். குறிப்பாக இந்தப் பெண்ணின் கணவன் வேறு பெண்களுடன் தொடர்பு வைத்திருப்பவர் என்பது வரைக்குமான கதைகளை அள வளாவிக் கொள்வர். அத்துடன் தமது தலைமை அதிகாரிகளின் குடும்ப விடயங்களையும் நன்கு அலசி ஆராய்வர்

இங்கு நமது பெண்கள் திருமணம், கணவன், குழந்தை ஒருவனுக்கு ஒருத்தி என்ற சமூகக் கட்டமைப்பின் கருத் தமைவுக்கு தம்மை மறந்த நிலையில் அடிமையாக்கப் பட்டடுள்ளமையை அவதானிக் கலாம். இந்த இயல்பில் ஊறிவிட்ட பெண் கள் தமது சுய விடுதலை பற்றிய சிந்தனை அற்ற வர்களாக இருப்ப தைக் காண்கி றோம். இங்கு நாம் ''பெட்டி ..ப்ரைடன்" என்ற மேல் நாட்டு மனோதத்துவ அறிஞர் ஒருவ ருடைய ''பெண்கள் ஒரு மனை வியாகவும் தாயாகவும் மட்டுமே வாழ்ந்து விடக் கூடாது. கல்வி யறிவு மூலம் தங்களை ஒரு முழுமையான மனிதராக உரு வாக்கிக் கொண்டு முன்னேற வேண்டும்." என்ற கூற்றை நோக்கு வது பொருத்தமானதாக அமைகிறது.

கலாசார வடிவங்களும் என்ற அடிமைக் கருத்தமைவுக்குள் பெண்கள் தங்களை மறந்து அமிழ்ந்து போயுள்ள சந்தர்ப்பங்களுக்கான சில

**பெண்கள் தமக்குக் கிடைக்கின்ற ஓய்வு நேரங்களை அல்லது தாம் ஒன்றாகச் சேர்கின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் என்ன விடயங்களைப் பற்றிப் பேசுகின்றார்கள்**

உதாரண சம்பவங்களை நோக்குவோம். இங்கு பெண்க ளின் நடை. உடை. அணிகலன். தலைமுடி அலங்கரிப்பு. காலணி என்பவற்றுடன் ஏனைய அழகு ஊட்டும் சாதனங்கள் யாவும் கலாசாரத் தளைகளாகப் பெண்களை அவர்கள் அறியாம லேயே அடிமைப்படுத்தியுள்ளது. இந்த அடிப்படையிலே கல்வி நிறுவனங்கள், தொழில் நிலை யங்கள் யாவற்றிலும் உள்ள பெண்கள் தமக்குக் கிடைக்கும் நேரங்களில் இவை பற்றிய உரையாடல்களில் ஈடுபடுகின்ற னர். இவ்வாறான உரையாடல்க ளின் வளர்ச்சி வீதம் இன்று



**"அழகான சாறி கட்டியிருக் கிறீர்கள்", "பிளவுஸ் பொருத்தமாக உள்ளது"**

அதிகரித்து பொதுவைபவங்கள் திருமண வைபவங்கள், பஸ் பிர யாணங்கள், தரிப்பு நிலையங்கள் ஆகிய இடங்களில் பகிரப்படு வதை அவதானிக்கக் கூடியதாக வுள்ளது.

அதிகாலையில் வேலைத் தலத்துக்குச் செல்லும் ஒரு பெண் ணை இன்னொரு பெண் அவரை வரவேற்கும் முக மாகவும் மகிழ்ச் சிப்படுத்தும் முக மாகவும் ''அழகான சாறி கட்டி யிருக்கிறீர்கள்" என்றும் ''பிளவுஸ் பொருத்தமாக உள்ளது என்றும் எந்தக் கடை யில் வாங்கினீர்கள் விலை என்ன என்பது பற்றியும் வினாவுவர். இப்போது குறிப்பிட்ட பெண்ணின் முகத்தில் மகிழ்ச்சியான அலைகள் பரவிப் பாய்வதையும், சந்தோஷத்தால் அந்தப் பெண் சத்தமாக சாறி பற்றிய விளக்கங் களைக் கொடுப்பதையும் அவ தானிக்கலாம். இதேபோன்று அணி கலன்களின் வடிவமைப்புப் பற்றிக் கதைத்தல் நகைகளின் தரம் அறி தல் நகைகளின் பெயர்களைக் குறித்து எடுத்தல் காலணிகளை மாற்றிப் போட்டு அளவு பார்த்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர். இதேபோல் தலைமுடி பற்றியும் அதன் அலங்கரிப்புப் பற்றியும் கதைப்பர். ஐயோ இவள் ஏன் முடியைக் குட்டையாக வெட் டினாள். இவளின் முடி அழகா கவும் நீண்டதாகவும் இருக் கின்றது என்றும் கதைப்பர்.

வேலைத் தலத்திலிருந்து வெளியேறும் நேரம் நெருங் கியதும் உடை, தலை, முக அலங்கரிப்பில் இறங்குவர் தலைமுடியை இழுத்துச் சீரா க்குவர் முகப்பூச்சுக்களைப் பூசுவர் இவை யாவும் அன்றாடம் தொழிலுக்குச் செல்கின்ற பெண்களின் செயற்பாடுகளாகக் காணப் படுகின்றன. மேலும் உடை அணிவதற்குக் கூடப் பல திட்டங்களைப் போட்டு அவற் றைச் செயற்படுத்திக் காட்டுவர் உதார ணமாக எல்லோரும் சேர்ந்து ஒரே நிறத்தில் சாறி உடுப்பது பற்றிய கலந்துரை யாடலில் ஈடுபட்டு வெற்றியும் கண்டு அதனை நடைமுறைப் படுத்திக் காட்டுவர். சட்டைகள் அணிந்து வேலைக்குச் செல்லும் பெண்களும் மேற் கூறியபடியான முறையில் தமக்கும் திட்டங்களை வகுத்துக் கொள்வர் பொதுவாக இவ்வாறான உரையாடல்களின் போது பல தரகர்கள், கடைகளின் பெயர்கள் யாவும் பகிரப்பட்டுக் கொண்டிருக்கும்.

மேற் குறிப்பிடப்பட்ட சில உதாரணங்கள் வணிகமுறை அடிமைப்படுத்தலுக்கும் பொது வானதாகக் காணப்படுகின்றது. பெண் நுகர்வோரை எதிர் நோக்கி அவர்களை அடியோடு தன் வயப்படுத்தும் விதமாகப் பல பொருட்கள் சந்தைக்குக் கொண்டு வரப்பட்டன. மேற்கு றிப்பிட்ட பொருட களுடன் பல அழகு சாதனங்கள் அலங்காரப் பொருட்கள் என்பன பெண்களின் யதார்த்தங்களை மறக்கடிக்கச் செய்கின்ற பணியில் பெரும் பங்கு வகித்து வருகின்றன. இவற்றின் மூலம் பெண்கள் தங்களை ஆணிலிருந்து பிரித்து இனங்காட்டக் கூடிய இயல்பான சந்தர்ப்பங்கள் அதிகமாகக் கைகூடி வந்தன ''முழு நிறைவான இல்லம்"என்ற கூற்று பொருட்களைச் சந்தைப் படுத்துவதற்கும் பெண்களை வணிகமுறை அடிமைகளாக வைத்திருக்க பெரிதும் உதவி வருகின்றது.

ஆகவேமேற் கூறப்பட்ட கட்டமைவுகளுக்குள் தங்களை அறியாமலே அடிமைப்பட்டுப் போயிருக்கும் பெண்கள் சமூக மானது வெளிவரவேண்டியதும் விடுதலைப பெற வேண்டியதும் அவசியமாகும். இங்கு விடுதலை பெற வேண்டும் என்ற கருத்து அனைத்து சமூகக் கட்டமைப் புக்களையும் புரட்சிகர வடிவில் உடைத்தெறிவது என்பதாகவும் மாற்றுக் கலாச்சார வடிவங்களை ஏற்றுக் கொண்டு பின்பற்றுவது என்பதாகவும் அமையப் பெறுவது தவிர்க்கப்படுதல் வேண்டும்.

உதாரணமாக திருமண மான பெண் தாலி அணிய வேண்டும் என்ற சமூகக் கட்டமைப்பினை உடைத்தெறிய வேண்டி தாலி அணியாமல் அல்லது கழற்றி வைத்துவிட்டு எங்கள் மீது சுமத்தப்பட்ட சமூகக் கட்டுக் களைத் துணிவுடன் கழற்றி எறிந்து விட்டோம். என்று மார்பு தட்டுகின்ற ஒரு பெண் சமூகத்தை உருவாக்கிவிடாமல், தாலி கட்டிய பெண்ணைப் பார்த்து பத்துப் பவுணா? பதினைந்து பவுணா? 20 கரட்டா 22 கரட்டா அவள் ஏன் நீண்ட காலமாக மஞ்சல் கயிறு கட்டியிருக்கின்றாள்? என்ற வீண் ஆராய்ச்சி நடவடிக்கைகளை இல்லாமல் செய்கின்ற சிந்தனை மாற்றங்களையும் அவற்றின் செயற்பாட்டு வடிவங்களுக்கான வழிமுறைகள் பற்றிய ஆய்வுகளிலும் பெண்ணிலை வாதிகளும் பெண் ணிலை அமைப்புக்களும் இறங்கிப் போராடுதல் வேண்டும். இதற்கு மாறாக மேற்கொள் ளப்படுகின்ற புரட்சிகரமான மாற்றுக் கலாசார நடவடிக்கைகள் யாவும் வெளித் தோற்றப்பாட்டில் மாத்திரமே விடுதலையைப் பெற்றுக் கொள்கின்ற கருவியா கவிருக்கும்.

மேற்கூறப்பட்ட கட்ட மைவுக்குள் தங்களை அறியா மலேயே சிக்கி இருப்பது பெண் களின் பலவீனத்தை பறைசாற் றுவதாகவுள்ளது. இவர்கள் தங் களைப் பற்றிய சுயசிந்தனையில் இறங்க முடியாதவர்களாக தங் களது வாழ்க்கையைச் செலுத் திக்கொண்டு விடுதலையையும் சமத்துவத்தையும் வெளியே தேடுகின்றார்கள். இவற்றை விடுத்து வலுவான கருத்தமைவு களை உருவாக்கி அதைப் பின் பற்றுகின்ற செயற்றிறன் வாய்க் கப் பெற்றவர்களாக சிந்தனை மாற்றங்களைப் பெறவேண்டும். அப்போதுதான் பெண்ணால் முடியாதது எதுவுமில்லை என்பது மெய்ப்பிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# பிணி பல தீர்க்கும் மூலிகை மகத்துவம்

## தூதுவளை

பொதுவாக எமது பிரதேசத்தில் காடுகளில், வேலிகளில் பற்றைகளில் தானாக பயிராகும் தூதுவளையை எல்லோரும் அறிய வாய்ப்பு இருக்கும். சுமார் ஐந்து அடிவரை வளரும் இம்மூலிகையின் பூ, ஊதா நிறமானது. பழம் சிகப்பு நிறமானது. இதன் இலையிலும் காம்பிலும் முட்கள் இருக்கும். பொதுவாக சித்த மருத்துவத்தில் இதன் இலை, பூ, வேர், காய், ஆகிய அனைத்துப் பாகங்களும் இடம் பெறுகின்றது. சித்தமருத்துவ சாத்திரத்தில் தொண்டை நோய்களுக்கும் காது நோய்களுக்கும் சுவாசாய நோய்களுக்கும் தூதுவளை முக்கிய மருந்தாகக் கருதப்படுகின்றது. இதனைத்தனியாகச் சாப்பிட்டும் பயன்பெறலாம். அல்லது துவையலாகவோ, சாம்பாராகவோ. கஷாயமாகவோ அல்லது சூரணமாகவோ பாவித்தும் பலன் பெறலாம்.

குழந்தைகளுக்கு ஏற்படும் ஆரம்பகால சயரோக நோய்களுக்கும் பாவிக்க இந்நோய் வேரோடு அற்றுப் போய்விடும். தாது பலவீனம் எனப்படும் விந்து உற்பத்தியில் ஏற்படும் குறைபாட்டையும் இம்மூலிகை குணமாக்கவல்லது. சுவாச நோய்களில் இரைப்பிருமல், சளித்தொல்லை போன்ற நோய்களுக்கு தூதுவளை ஓர் சிறந்த நிவாரணியாகும். இதனை தினசரி பசுமையாகவே பறித்து சாப்பிட்டு குணமடையலாம். அமெரிக்கா விஞ்ஞானிகள் இதன் மகத்துவத்தை ஆராய்ந்து, புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடித்துள்ளதாக அண்மைய தகவல்கள் தெரிவிக்கின்றன. நவீன முறைகளில் இதனை ஆய்வு செய்த விஞ்ஞானிகள் இதில் எட்டுவகையான கிருமிகளை முற்றிலும் கொல்லும் ஆற்றல் படைத்த மூலிகையாகக் கண்டுபிடித்து, வாய்ப்புற்று உள்ள நோயாளிக்குக் கொடுத்து புற்று நோயைக் குணமாக்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றது. இம் மூலிகைக்கு சயரோகம், சுவாச காசம், சளி, ஜலதோஷம் போன்ற நோய்கள் குணமாகும்.

இதன் இலையுடன் ஆடாதோடை இலை சிற்றரத்தை அதிமருதம், திப்பிலி, மிளகு சேர்த்து கசாயமிட்டு அருந்தி வந்தாலும் மேற்சொன்ன நோய்கள் நீங்கும். தூது வளையை நெய்யில் வதக்கி உப்பு, புளி மிளகாய் வெங்காயம் சேர்த்து அம்மியில் வைத்து அரைத்து உணவுடன் சேர்த்து உட்கொண்டால் சளித்தொல்லை இருமல் போன்ற நோய்கள் குணமடையும்.

தொண்டைக்கழலை தைராய்டு கட்டி, வாய்க்கட்டி, காது அழற்சி போனற நோய்களை அகற்றும் வல்லமை உண்டு. இதன் பூவுக்கு தாது விருத்தி செய்யும் குணம் உண்டு. பழம் சளியைக் கரைக்கும் இலையைப் பிழிந்து, சாற்றைக் காதில் இட, காதுவலி நீங்கும். இதன் இலையை தேவையான அளவு எடுத்து கசாயம் வைத்து தேன் கலந்து, காலை-மாலை இரு வேளை அருந்தி வர இருமல், இரைப்பு, சளி, சளியுடன் கூடிய சுரம் குணமடையும். இதன் இலைகளை அரிசி மாவுடன் சேர்த்து அரைத்து ரொட்டி செய்து சாப்பிட்டுவந்தால் தொண்டை வாய்ப் பகுதிகளிலுள்ள கட்டிகள் கரைந்து போய்விடும். இருமல், இளைப்பு,

*மூலிகை வேந்தன்*
*ஆயுர்வேத சித்த வைத்தியர்*
*ஸ்ரீராமநாதன் கலைவாணன்*
*(கண்ணன்)*
*99/3, வைத்தியர் வீதி,*
*சீலாமுனை, மட்டக்களப்பு.*

---

**கவிதைப் போட்டி 50ற்கான பரிசுக் கவிதை**

## காலங்கடந்த ஞானம்



*''மதியில்லா நண்பரின் சதியால் வாழ்வில்*
*கதியிலா தனிமரம் ஆனேன்'' என்று*
*காலம் கடந்து உதித்த ஞானம்*
*பாலம் வரைக்கும் இவரை அழைத்ததோ?*

எஸ்.ரதி,
5, சோனகர் தெரு,
மட்டக்களப்பு.

**பாராட்டுக்குரியது**

## தவிப்பு

*காதலியின்*
*பிரிவுன்னை வாட்டுகிறதா!*
*தற்கொலை முயற்சியை*
*கைவிடு.*
*கவலைகள் மறந்து*
*கண்களை துடைத்துக் கொள் அங்கே*
*திரும்பிப்பார் உன்*
*காதலி உன்னைத் தேடி*
*வந்து கொண்டிருக்கிறாள்.*

தா.ஜோய்,
மட்டக்களப்பு.

## சிந்தனை செய்வது என்ன

*புகையிரத பாதை வழியில்*
*இருந்து சிந்திப்பது என்ன?*
*வீட்டின் கஷ்ரமா?*
*நாட்டில் ஏற்பட்டுவரும் சமாதானம்*
*நிலைக்குமா என்பது பற்றியா?*

கி. மீனா,
பழந்தோட்டம்,
களுவாஞ்சிக்குடி.

## பார்த்திரு

*ஓட்டமாவடி பாலத்தில்*
*ஓடத்தைப் பார்க்கும் - தம்பியே*
*முன்பு போல் இல்லையடா- இப்போ*
*வாழைச் சேனைவரை புகைவண்டி வரும்*
*பார்த்திரு!*

வ.ஸ்ரீபன், 142/8, பாலமீன்மடு,
முகத்துவாரம், மட்டக்களப்பு.

---

**இப்படத்தைப் பிரதிபலிக்கும் கவிதையினை எழுதி அனுப்புங்கள். அனுப்பும் கவிதைகள் வார்த்தைகளில் எண்ணிக்கையில் அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து கீழ்க்காணும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்புங்கள்.**

**சிறந்த கவிதைகளுக்கான நல்ல தரமான கவிதைப் புத்தகப் பரிசு காத்திருக்கிறது. மேலும் உங்களுடைய கவிதைகளை எதிர்வரும் ஜூன் மாதம் 12ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.**

*கவிதைப் புத்தகப் பரிசினை வழங்குபவர்*
ஸ்ரீ கருமாரி சோதிடம்,
எஸ்.கமலநாதன் (ஆசிரியர்),
இல: 34/1, படுகாட்டார் வீதி,
நாவற்குடா.

கவிதைப்போட்டி-52
தினக்கதிர் வாரவெளியீடு
த.பெ.எண்:- 06
மட்டக்களப்பு



---

# தினக்கதிர் குறுக்கெழுத்துப் போட்டி இல: 24

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | ★ | 4 | |
| | ★ | | ★ | | ★ | | ★ |
| 5 | 6 | | ★ | ★ | 7 | | ★ |
| ★ | 8 | | | 9 | | | 10 |
| 11 | | ★ | ★ | | | | |
| | | ★ | 12 | | ★ | ★ | |
| | ★ | 13 | | | | ★ | |
| 14 | | | | ★ | 15 | | |

**இடமிருந்து வலம்**

1. நுண் கலைகளில் ஒன்று.
4. பெண் யானையைக் குறிப்பது. இச்சொல் ஓர் வினையாகவும் உள்ளது.
5. வளி. (திரும்பியுள்ளது)
8. உமறுப்புலவர் இயற்றிய 3 காண்டங்களைக் கொண்ட ஓர் காவியம்.
13. இராசிகளில் ஒன்று. (திரும்பியுள்ளது)
14. 1833ல் இலங்கையில் கொண்டுவரப்பட்ட கோல்புறூக் சீர்திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேசவாரி முறையொன்று. (திரும்பியிருக்கிறது.)
15. குரவர். (திரும்பியுள்ளான்)

**மேலிருந்து கீழ்**

1. நெல்லின் இளையது.
2. பட்டம். (குழம்பியுள்ளது)
3. மூலிகை மருத்துவத்திற்கு இம் மரத்தின் ஒவ்வொரு பாகமும் முக்கியமாம். இது ஓர் கிருமி கொல்லியாகும். (தலைகீழாக இருந்து. இறுதி எழுத்தை இழக்கின்றது)
4. அந்தணர்.
6. சினம் என்பதன் ஒத்தகருத்துச் சொல் (குழம்பியுள்ளது)
7. ஆசை என்பதன் எதிர்பதம்.
9. ஒலிம்பிக்கில் ஆபிரிக்காக் கண்டத்தைக் குறிக்கப் பயன்படும் நிறம். (தலைகீழாக உள்ளது)
10. காடு (தலைகீழாகவுள்ளது)
11. ஒரு தண்டிலே பலவகை மலர்கள் கட்டப்பட்டுள்ள பூக்கொத்தை இப்படி அழைப்பர்.
12. சூரியன். (தலைகீழாகவுள்ளான்)

இதைப் பூர்த்திசெய்து அருகிலுள்ள விலாசத்தையும் வெட்டி ஒட்டி, தபாலட்டையில் மாத்திரம் அனுப்பி வைக்கவும். அதிஷ்டசாலிக்கு ஒருமாதகாலத்துக்கு 'தினக்கதிர்' வாரவெளியீடு இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

**குறுக்கெழுத்துப்போட்டி -24**
**தினக்கதிர் வாரவெளியீடு,**
**த.பெ.எண்:- 06,**
**இல:- 155, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**

## குறுக்கெழுத்துப்போட்டி 22ற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. அயோத்தி
3. பனாமா
5. பச்(சை)
6. பாணக்க(ம்)
7. கசப்பு
9. சந்திரன்
10. பாகம்
12. அத்தி
14. தேள்
15. ஆசான்

**மேலிருந்து கீழ்**

1. அரிச்சந்திரன்
2. சப்பாத்தி
3. படிக்கம்
4. மாசு
7. அரபு
8. நேபாளம்
11. கந்தன்
13. வெள்ளி

**பரிசுக்குரியவர்**
என்.எல்.சபா,
மக்கள் வங்கி,
ஏறாவூர்-3.

## பாராட்டுக்குரியவர்கள்

1. என். ஜெயராஜ், இல,10, கிருஷ்ணன் கோவில் வீதி, கல்லடி.
2. வீ.கிருஸ்னானந்தன், தாமரைக் கேணி,
3. ச.கு.தாட்ஷாயினி, பழுகாமம்-2. பெரியபோரதீவு.
4. வீ.இ.கலைமதி, நாவற்குடா.
5. வீ.தயாபரன், நெல்லிக்காடு, கூளாவடி, வக்கி எல்ல.
6. எஸ்.ரதி, சோனகத்தொரு, கோட்டைமுனை.
7. அ.பிரசாத், வாவிக்கரை.
8. அருணா, வாழைச்சேனை.
9. பு.ஜனகன் மட்டக்களப்பு
10. சூ.ஜோண் யுவராஜ், நாவற்குடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA

# வியாழன் மாற்றம் 30.06.2002

## குரு வணக்கம்

*மறைமிகு கலைநூல் வல்லோன்*
*வானவர்கு அரசன மதியூகன் –*
*நறை சொரி கற்பகப் பொன்னன்*
*நாட்டிலுக்கு அதிபராகி நிறைதனம் சிவிகை*
*மண்ணில் நீடு யோகத்தை நல்கும்*
*இறைவனாம் குரு வியாழன்*
*–இரு மலர் பாதம் போற்றி–*

தேவகுரு பிரகதஸ்பதி என்று அழைக்கப்படும் தேவர்களுக்கெல்லாம் குருவான வியாழபகவான் பிரம்ம தேவரின் புத்திரான ஆங்கிக முனிவருக்கும் அவர் தர்மபத்தினி. சித்திரா தேவிக்கும் புத்திரனாக அவதரித்தவர் இராசு மண்டலத்திலே மற்ற கிரகங்களைவிட மிகப் பெரிய கிரகம் சகலருக்கும் பூரண சுகத்தை அளிக்கும் வியாழபகவான் ஞான ஒளி பொருந்தியவராக திகழ்கின்றார்.

இவர் இரத்தினத்தில் புஸ்பராகத்தையும் தானியத்தில் கடலையையும் புஸ்பத்தில் முல்லையையும் லோகத்தில் பொன்னையும் சமித்தில் அரசையும் தன்னகத்தே கொண்டவர். தனுசு மீனராசிகளுக்கு அதிபராகவும், கடகராசியில் உச்சமும் மகரத்தில் நீசமும் பெறுபவர். இவர் ஒரு இராசியில் கிட்டத்தட்ட ஒரு வருடம் சஞ்சாரம் செய்வார். தான் நிற்கும் இராசியிலிருந்து. 5ம்,7ம்,9ம் இராசி வீடுகளை தனது பார்வையின் மூலம் சிறப்புறச் செய்வார். குருபார்வை கோடி புண்ணியம் என்பது வேதவாக்கு இவர் மகா திசையில் 16 வருடங்களைக் கொண்டுள்ளவர் புனர்பூசம்-புரட்டாதி விசாகம் நட்சேத்திரங்களுக்கு அதிபனாக விளங்குபவர். வியாழன் குரு- சுபன்- மந்திரி- பிரகஸ்பதி. பொன்னவன் அந்தணண்- அரசன் தேவகுரு பீதகன் என்றெல்லாம் வேறு பெயர்களும் உடையவர். கெட்டகிரகங்களினால் வரும் கொடும் பலன்கள் எல்லாம் இவர் பார்வைபட்டால் விலகி விடும். குரு. 12 வருடங்களுக்கு ஒருமுறை சூரியனை சுற்றி வருகின்றது.

ஒருவருக்கு திருமணமாக வேண்டுமானாலும் குழந்தை பிறக்க வேண்டுமானாலும் வாகனம் சொந்த வீடு கட்டகுரு பகவானின் கருணை இல்லாவிட்டால் நடைபெறமாட்டாது. குரு ஜாதகத்தில் கேந்திரம் பெற்று விட்டால் எல்லா விததோசம்களையும் தவிடுபொடியாக்கிவிடும் தனுராசியில் மூலத்திரி கோணம் குருவிற்கு உண்டு. லக்கினத்தில் குரு இருந்துவிட்டால் அரசியல் தத்துவம் அரசபதவி தத்துவ வேதவிற்பன்னராக இருப்பார்கள்.

இவா சந்திரன் உடன் கூடினால் குரு சந்திரயோகம் என்றும் செவ்வாயுடன் கூடினால், குருமங்கல யோகம் என்றும் சிறப்புப் பலன்களைக் கொடுக்கக் கூடியவர். குரு சந்திர யோகம் பெற்றவர்கள் தனவந்தர்களாகவும், அரசியல் அரசு பதவிகளில் பெரும் இடம்களில் சிறப்புப் பெற்றவர்களாகவும் திகழ்வார்கள். கல்வியில் பல பட்டம்களைப் பெறுவர் சமூகத்தில் பெரும் புகழ் அடைவார் கள்.

இப்படிப் புகழ்பெற்ற வியாழ பகவான் திகளும் சித்திரை பாணு வருடம, ஆணி மாதம் கச திகதி. ஞாயிற்றுக்கிழமைக்கு சரியான ஆங்கில வருடம் 2002ம் ஆண்டு யூன் மாதம் 30ம் திகதி மிதுனராசியிலிருந்து கடகராசிக்கு இடம் பெயருகின்றார். இதன்படி இவர் உச்ச வீடான கடகராசியில் நின்று தனது ஐந்தாவது பார்வை மூலம் விருட்சிகராசியையும் 7வது பார்வை மூலம் தனது நீசவீடான மகரராசியையும் தனது 9வது பார்வை மூலம் மீன ராசியையும் பார்வை இடுவதன் மூலம் சுபதிருஷ்டி செய்கின்றார்.

# இராசிகளின் பலன்

### கடகராசி

புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய இரண்டேகால் நட்சத்திரங்களைக் கொண்ட இந்த இராசி வீட்டுக்காரர்களுக்கு இந்த வியாழமாற்றப் பலன்படி சந்திரன் ஆட்சியும் வியாழன் உச்சமும் செவ்வாய் நீசமும் பெறும். இந்த ராசிக்காரர் நல்ல சிறப்புப் பலன்கள் ஏற்படும். மாணவ, மாணவிகள் கல்வியில் சிறப்புற்று விளங்குவார்கள். படித்து வேலை இல்லாதிருக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கள், வெளி நாட்டுப் பிரயாணங்கள் கைகூடி வரும். திருமணம் கை கூடாமல் இருக்கும் இளைஞர்யுவதிகளுக்கு திருமணம் கைகூடிவரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சிறப்பாக அமையும். முதியோர்களுக்கு தேகநிலை சிறப்பாக அமையும். கடவுள் பக்தி ஓங்கும். பிரிந்தவர்கள் ஒன்றுகூடுவர்.

### சிம்மம்

மகம்- பூரம், உத்தரம், 1ம் பாதம் உட்பட இரண்டேகால் நட்சேத்திரத்தை உள்ளடக்கிய சிம்மராசியில் சூரியன் ஆட்சி பெறும். இந்த இராசிக்காரர்களுக்கு இந்த வியாழ மாற்றம் படி வியாழன் 12ல் வருகின்றார். இராசி வீட்டுக்கு 12ம் வீடு விரயஸ்தானமாகும். அதன் படி மாணவர்கள் கல்வியில் சிறப்புக் குறைவாக இருக்கும். வேலையற்ற படித்த இளைஞர் யுவதிகளுக்கு வேலை தாமதமாகும். திருமணமானவர்களுக்கு குடும்பத்தில் சஞ்சலம் உண்டாகும். வரவுக்கு மேல் செலவு உண்டாகும். திருமணமாகாத இளைஞர் யுவதிகளுக்கு திருமணம் தாமதமாகும். உறவினர் பிரிந்து செல்வார்கள். முதியோர்களுக்கு தேககசுகம் பாதிப்படையும். வியாழக்கிழமை விரதம் பிடித்து அல்லது வியாழனுக்கு சாந்தி செய்து தேக நிவர்த்தி பெறலாம்.

### கன்னி

உத்தரம் 2ம், 3ம், 4ம் பாதம் அத்தம், சித்திரை 1ம், 2ம் பாதம்களை உடைய இரணடேகால் நட்சேத்திரத்தை உள்ளடக்கிய கன்னிராசிக்கு 11ம் வீட்டிற்கு வியாழன் வருகின்றார். புதன் உச்சமும் வெள்ளி நீசமும் பெறும். இந்த இராசிக் காரருக்கு வியாழ மாற்றம் நல்ல சிறப்புப் பலன்களைக் கொடுக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள். படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கைகூடிவரும். திருமணம் கைகூடிவரும். அதிஷ்டம் யோகம் உண்டு புதிய வாகனம்கள் கிடைக்கும் காதலர்கள் ஒன்றுகூடுவர் குடும்ப வாழ்கை சிறப்பாக அமையும் வெளிநாட்டு பிரயாணம் வெற்றிபெறும் தேகசுகம் சிறப்பாக இருக்கும்.

இரண்டாண்டுகளைப் பூர்த்தி செய்துவிட்ட உங்கள் தினக்கதிர் பற்றியதான கருத்துக்களை ஒவ்வொரு பக்கங்கள் பற்றியதான விமர்சனங்களை பிடித்தவை, பிடிக்காதவைகளை எமக்கு எழுதியனுப்புங்கள்.

தேடிவந்த வாழ்த்துக் கிரீடங்கள்
தினக்கதிர்
155, திருமலை வீதி,
த.பெ.இல.-0[illegible]
மட்டக்களப்பு.

# இலகு ரக போர் விமான பரிசோதனையில் இந்தியா வெற்றி!

இந்திய விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்ட நவீன இலகு ரக போர் விமானம் கடந்த வியாழக்கிடிமையன்று சூநற்று வேற்றிகரமாக சோதனை சேய்யப்பட்டது.

இந்திய விமானப்படைக்கு இது வரை வெளிநாடுகளில் இருந்து தான் போர் விமானங்கள் வாஙகப்பட்டு வந்தது. இதற்காக பல்லாயிரம் கோடி செலவிடப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இந்திய விமானப் படைக்காக இந்தியாவிலேயே போர்விமானங்கள் தயாரிக்க அரசு முடிவு செய்தது.



இந்திய விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்ட இலகு ரக போர் விமானம் வெற்றிகரமாக பறக்கும் காட்சி.

இதற்காக இந்திய விஞ்ஞானிகள் முடுக்கி விடப்பட்டனர்.

கடந்த 9 ஆண்டுக்கும் மேலாக போர் விமானத்தை தயாரிக்கும் முயற்சியில் இந்திய விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் போட்ட தடைகற்களை மீறி இந்திய விஞ்ஞானிகள் இலகு ரக போர் விமானத்தை தயாரித்தனர். கடந்த ஆண்டு இந்த போர் விமானம் சோதனை செயயப்பட்டது. இதையடுத்து அடுத்ததாக தயாரிக்கப்பட்ட விமானத்தில் வேறு சில மாற்றஙகள் செய்யப்பட்டன. நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட இந்த புதிய போர் விமானத்தில் நவீன கருவிகள் பொருத்தப் பட்டுள்ளன.

இந்த புதிய போர் விமானம் நேற்று பெங்களூரில் உள்ள இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவன விமான தளத்தில் சோதனை செய்யப்பட்டது. வெள்ளை நிறத்தில் கம்பீரமாக நின்றிருந்த அந்த விமானம் வெற்றிகரமாக வானில் பறந்தது. அதை விமானப்படை அதிகாரியான விங கமாண்டர் டிபானர்ஜி இயக்கினார். அந்த விமானத்துக்கு பாதுகாப்பாக மிராஜ 2000 மற்றும் மிக் 21 ரக போர் விமானஙகள பறந்தன. 30 நிமிடம் கழித்து இலகு ரக போர் விமானம் தரை இறஙகியது. இந்த சோதனை வெற்றிகரமாக நடந்ததாக அதிகாரிகள் அறிவித்தனர்.

போர்விமானம் சோதனை செயயப்பட்டதை இராணுவ அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், அவரது பாதுகாப்பு ஆலோசகர் ஆத்ரே மற்றும் விமானப்படை அதிகாரிகள், விஞ்ஞானிகள் பார்த்தனர். முழுக்க முழுக்க கம்ப்யூட்டரால் கட்டுப்படுத்தப்படும் இந்த விமானம் அடுத்தடுத்து 25 முறை சோதனை செய்யப்படும்.

அதன்பிறகு இந்த விமானம் இந்திய விமானப்படையில் சேர்க்கப்படும். 8 1/2 டன் எடையுள்ள இந்த இலகுரக போர் விமானத்தில் 4 தொன் வெடிகுண்டுகளை எடுத்து செல்ல முடியும். மணிக்கு 600 கிலோ மீட்டர் தூரம் வரை இந்த விமானம் பறந்து செ[illegible]

இந்த சோதனையை நேரில் பார்க்க பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. விமான நிலையத்துக்கு வெளியே கூடிநின்ற நூற்றுக்கணக்கான பொதுமக்களோடு சேர்ந்து தான் இலகு ரக போர் விமானம் பறந்ததை அவர் களால் பார்க்க முடிந்தது.




## வாழ்த்துகிறேன் உன்னை

கிழக்கு மண்ணின் முதல் முத்தாக
உருவெடுத்த தினக்கதிரே ....
வாரந்தோறும்... உன்னில்....
அரசியலை அலசும் அரசியல்
மாணவர்கள் விரும்பிக் கற்கும்
'சிறுவர் மலர்'
கவிஞர்களை உருவாக்கும்
'கவிதைப் போட்டி
சினிமா ரசிகர்களுக்கு
'சினிமா'
பற்பல அம்சங்களை
திரட்டித்தரும் ...
'ஞாயிறு சாரளம்'
மேலும் முத்தான
அம்சங்களை சுமந்து......
ஞாயிறு விடியலிலே
இனிதே தவழ்ந்திடுவாய் ...
மென் மேலும் உன் சேவை
இவ்வுலகம் உள்ளவரை
தொடர வேண்டும் என்று
வாழ்த்துகிறேன் உன்னை!

"சுரத்தநகர் இளங்கவி"

## தொடரட்டும் உன் பாங்கில் உன் பணிகள்

கிழக்கின் உதய சூரியனாக
தமிழின் தனிக் குரலாக
பவனி வரும் தினக்கதிரே
உன் மகத்தான சேவை
எந்நாளும் எமக்குத் தேவை
இலை மறை காயாய்
எழுதிக் கொண்டிருந்தோருக்கு
ஏடமைத்து எழுதத் தடம்
கொடுத்த தினக்கதிருக்கு
எந்நாளும் என் வாழ்த்துக்கள்
தொடரட்டும் உன் பாங்கில்
உன் பணிகள்.

வி. வி. ரெத்னா,
மண்டூர்.

## மகிழ்ச்சியான செய்தி!

கடந்த சில வருடங்களாக நானும் எனது குடும்பத்தினரும் விரும்பி வாசிக்கும் ஒரே பத்திரிகை தினக்கதிர். அது தாங்கிவரும் சகல விடயங்களும் ஒன்றுவிடாமல் வாசிக்கக்கூடியது. சுவை கூடியது. மட்டக்களப்பிலிருந்து சகல அம்சங்களையும் உள்ளடக்கிய இத்தகையதொரு பத்திரிகை வெளிவருவதென்பது மகிழ்ச்சிக்குரியது.

செ. அ. பௌமியா,
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் படையினர் அத்துமீறல்கள்

அண்மையில் தமிழ்த் தேசத்திற்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையில் ஏற்பட்டபுரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் வகையிலும் சமாதானத்திற்கான முன்னெடுப்புகளை குழப்பும் வகையிலும் அரசபடையினர் திட்டமிட்டு செயற்பட்டு வருவதனையும் தத்தை மீறும் வகையிலும், சமாதான முயற்சிகளை குழப்பும் வகையிலும் அரச படையினர் செயற்பட்டு வருவது அனைவரும் அறிந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் திருகோணமலைத் தமிழ் மக்கள் மீது அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட வன்முறை சம்பவங்கள் பற்றியும் அதில் ஆராயப்பட்டன அதனைத் தடுத்துநிறுத்த வேண்டிய அவசியத்தையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கவனத்திற்குக் கொண்டுவரும் வகையில், அண்மையில் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்மந்தன் இல்லத்தில் கூட்டமொன்று இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட இளைஞர் அபிவிருத்தியகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் திருகோணமலை மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அசமந்த போக்குகள் குறித்து காரசாரமான விமர்சனங்கள் இதன்போது முன்வைக்கப்பட்டன.

இப்புரிந்துணர்வு ஒப்பந்த சூழலில் வடக்கு கிழக்கில் ஒப்பந்

### கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்கள்

◆ நிலாவெளியில் இரு தமிழ் பெண்கள் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்.

◆ கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இரு மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்டதாக்குதல்.

◆ புறாமையில் உல்லாச பயணப் படகு சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 'செல்வம்' என்ற நபர்மீது கடற்படையினரால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்.

◆ முல்லைக் கடலின் மத்தியில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 8 படகுகளில் இருந்த மீனவர்களை கடலில் பாயும் படிகூறிய கடற்படையினரின் அடாவடித்தனம்.

◆ திருக்கடலூரைச் சேர்ந்த வில்வராசா ஜெயந்தன் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்.

### இராணுவ பொலிஸ் அடக்குமுறை

◆ திருமலை லிங்கநகர் மக்கள்மீது இராணுவம் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் கெடுபிடிகள்.

◆ கடந்த 28.04.2002 அன்று திருமலையில் மக்கள் வெளிப்படுத்திய சட்டபூர்வமான கண்டனப் பேரணி நிகழ்வில் படையினர் ஏற்படுத்திய குழப்பம்.

◆ பாடசாலை பொது அமைப்புகளில் அமைந்துள்ள இராணுவ பொலிஸ் முகாம்கள்.

◆ திருமலை வரோதயநகர் தமிழ் கலவன் பாடசாலையிலுள்ள கடற்படைமுகாம்.

◆ அல்ஹாம் வித்தியாலய படைமுகாம்-மூதூர்.

◆ பச்சனூர் வித்தியாலய படைமுகாம்-மூதூர்

◆ பூவரசம்தீவு படைமுகாம் கிண்ணியா சாம்பல் தீவு சல்லி அம்பாள் பாடசாலை அருகிலுள்ள கடற்படை முகாம்.

◆ குச்சவெளி 6ம் கட்டை. முருகன் கோயிலிலுள்ள கடற்படைமுகாம்.


◆ மூதூர் மல்லிகைத் தீவு கிராம அபிவிருத்தி சங்க பொலிஸ்முகாம்.

◆ லிங்க நகர் பிரதேசசபைகட்டிட இராணுவ முகாம்.

◆ தோப்பூர் மத்திய மருந்தக இராணுவ முகாம்.

அரச படையினரால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மேற்படி வன்முறை சம்பவங்கள், பொது அமைப்புக்களை அரசபடையினர் பயன்படுத்தும் நிலைமை, ஆகியன சமாதானத்திற்கான முன்னெடுப்புக்களை பாதிக்கும் அதேவேளை தமிழ் மக்களின் இயல்புவாழ்வு நிலையையும் பாதிக்கின்றது. என இதில் சுட்டிக்காட்டப்பட்டள்ளது.

-அபிநந்தன்-






அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில் திறந்துவைக்கப்பட்ட முள்ளிப்பொத்தானை உப ரயில் நிலையத்தின் தோற்றம்



# கண்ணிவெடி அகற்றும் பணியில் புலிகளின் கண்ணிவெடிப் பிரிவினர்

வன்னி மண்ணில் இன்னமும் 14 இலட்சம் மிதிவெடிகள் இருப்பதாக உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் குறைந்தளவு மட்டுப்படுத்தப்பபட்ட வசதிகளுடன் இவற்றை அகற்றுவதற்காக பாரியளவு பணி மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.



யுத்த காலங்களில் விடுதலைப் புலிகளாலும் இராணுவத்தினராலும் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் இதுவரை புனர்வாழ்வுக் கழகத்தினர் மட்டுமே ஈடுபட்டு வந்தனர். தற்போது விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவினைச் சேர்ந்த கண்ணிவெடிப்ப பிரிவினரைக் கொண்டு இப்பணி மேற் கொள்ளப்படுகின்றது.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட முள் உபகரணங்களால், பல்வேறு துன்பங்களை எதிர் கொண்டுவரும் பணியாளர்களின் பணி உண்மையில் பாராட்டுதற்குரியது.

அமெரிக்காவினால் கண்ணிவெடிகளை அகற்றும் பணிக்கு அனுப்பப்பட்டவர்கள் வேறு பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் இவர்கள் அமெரிக்காவின் உளவு நிறுவனங்களினால் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் எனவும் தெரிவிககப்படுகின்றது.

ஆனாலும் இவர்களது வருகையினை அடுத்து மந்த கதியில் இருந்த கண்ணவெடி அகற்றும் பணி நவீன இயந்திரங்களையும் கொண்டு துரித கதியில் இடம்பெறும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இதேவேளை வன்னியில் செயற்பட்டு வரும் மனிதநேயக் கண்ணி வெடி அகற்றும் தொண்டர்கள் இதுவரை முப்பத்து ஏழு, 600.000 சதுர மீற்றர்கள் மிதிவெடி வயல்கள் இருந்த பிரதேசத்தை எந்த நவீன கருவிகளும் இல்லாது மரபுவழி முள் உபகரணங்களுடன் கண்ணி வெடி அகற்றி மக்கள் வாழ்விடங்களாக்கியுள்ளனர். என்றும் நவீன தொழில்நுட்பங்களுடனும் செயற்பட்டு வரும் "சிம்பாவே" கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் யாழ் மண்ணில் 230,000 சதுரமீற்றர் பிரதேசத்தில் மட்டுமே இதுவரை கண்ணி வெடிகளை அகற்றியுள்ளதாய் மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றது.

# இடைக்கால நிர்வாகம் உருவானால் வட-கிழக்கில் புலிகளின் நீதி நிர்வாகம்

இடைக்கால நிர்வாகம் தமிழீழ விடுதலைப் புலிகள் கைகளுக்குத் தாவும் வரைக்கும் சமாதான உடன்படிக்கை நீடிக்குமா? இடைக்கால நிர்வாகசபைக்கு அரசு எவ்வாறான அதிகாரம் வழங்க இருக்கின்றது என்பன சிந்தனைக்கு எட்டாத அரசியல் சதுரங்கமாகவே இருக்கின்றது.

இது ஒரு புறமிருக்க. இடைக்கால நிர்வாகத்தினை புலிகள் ஏற்கின்ற போது வடக்கு கிழக்கில் ஸ்ரீலங்கா காவல்துறை, புலிகளின் காவல்துறை நிர்வாகத்துடன் இணையுமா? புலிகளின் நீதி மன்றங்கள் திறக்கப்பட்டு, காவல்துறை சட்டக் கோவை நடைமுறைப்படுத்தப்படுவதில் எவ்வாறான நிலைப்பாட்டினை கொண்டிருக்கும்? என்பவை சிந்திக்க வேண்டியவை.

புலிகளினால் இயற்றப்பட்ட காவல்துறை, நீதித்துறை சட்டங்களே வன்னியில் நடைமுறையில் உள்ளது. அதே சமயம் வடக்கு கிழக்கு வாழ் மக்களும் [illegible] சினைகளைத் தீர்ப்பதற்கு அரச நீதி மன்றங்களைத் தவிர்த்து விடுதலைப் புலிகளின் காவல் நிலையங்களையே நாடிச் செல்வதைக்காணக் கூடியதாயுள்ளது. இது அரச நீதிச் சேவையில் மக்கள் அவநம்பிக்கை கொண்டுள்ளதையே காட்டுகின்றது. நீதி. நியாயங்களை உடனடியாக கண்டறிந்து கால தாமதம் இன்றி உடனடியாக தீர்வு காணல். நீதி வீண் விரயம் செய்யப்படாமை. அரச நிர்வாகம் போன்று லஞ்ச. ஊழல் என்பவை இல்லாமை முதலான அனுகூலங்கள் விடுதலைப் புலிகளின் நீதிச் சேவையில் இல்லாததினாலேயே மக்கள் புலிகளின் நீதிச் சேவையில் விருப்பம் கொண் [illegible]

*Foundation for excellence in management studies*

**FCMS-UK**

**Foundation Certificate In Management Studies [4 months]**

**July 2002 Intake**
Commence: 07-07-2002

ICM

Conferred by
**Institute of Commercial Management [UK]**

Entry to Diploma in Business Administration [Institute of Business Administration and Management .UK]
Entry to Certificate in Management [University of Leicester UK]
Entry to Diploma in Marketing[SLIM] [Sri Lanka Institute of Marketing ]

INGRED

**Managed worldwide by Institute of Global Resources Development**

For information contact:

YMCA - Batticaloa,
Kanagi Amman Kovil Road,
Batticaloe.

**TEL:065-22495 or 074-405227**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.